Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :223 ஆனி 25ஆம் நாள் வியாழக்கிழமை 09 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## நினைவேந்தலுக்கு தடை கிடையாது!

### மல்லாகம் நீதிமன்றம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 9
நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவுநாள் கடைப்பிடிப்பதை தடை செய்யுமாறு மானிப்பாய் பொலிஸார் கோரியபோதிலும், மல்லாகம் நீதிமன்றம் அதற்கு மறுப்புத் தெரிவித்தது. அத்துடன் மனு மீதான விசாரணை எதிர்வரும் 13ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் இன்று நினைவுநாள் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதன்போது முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் வகையிலும், 150 பேரைத் திரட்டி போராட்டம் 21



## வாழ்வதற்கான உரிமை தமிழர்களுக்கு போதும்

### அதிகாரப் பகிர்வு தேவையில்லை என்கிறது ராவணா பலய அமைப்பு

கொழும்பு, ஜூலை 9
இந்தியாவால் திணிக்கப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கமுடியாது. அது இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று ராவணா பலய அமைப்பின் பொதுச்செயலர் இத்தேகந்த சத் 24

# நல்லூரும் நமதே!

### மேதானந்த தேரரின் அடுத்த வெடி

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் சபுமல் குமார என்ற சிங்கள இளவரசரினால் கட்டப்பட்டது – என்று தெரிவித்துள்ளார் தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர். 24

# கோத்தாபயவின் ஆட்சியில் ஊடக அடக்குமுறை இறுகும்

### அடித்துக் கூறுகின்றார் சரவணபவன்



யாழ்ப்பாணம், ஜூலை 9
ஜனாதிபதி கோத்தாபயவின் இராணுவ சர்வாதிகார ஆட்சியில் மீண்டும் ஊடக அடக்குமுறை மேலோங்கும். ஊடகவியலாளர்கள் மீது கைக்குண்டுகள் வீசப்படவும் துப்பாக்கி வேட்டுகள் நடத்தப்படவும்கூடும் எனவே ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். இவ்வாறு தெரிவித்தார். 23

## யாழ்ப்பாணத் தெரிவத்தாட்சி அலுவலகம் முன் வாள்வெட்டு


### பணியாளர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகமாக இயங்கிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண மாவட்டச் செயலக வாசலில் வைத்து, மாவட்டச் செயலகத்தில் பணிபுரியும் சிற்றூழியர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார். சுற்றுச் சூழல் அதிகார சபையில் 23

### வாள்வெட்டு நடத்தினரென

## மல்லாகத்தில் ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் மாவட்ட செயலக தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் முன்பாக, அங்கு பணியாற்றும் அலுவலர் மீது வாள்வெட்டு நடத்திய குற்றச்சாட்டில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மல்லாகம் கனி கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரின் நடவடிக்கையில் மல்லாகத்தில் வைத்து சந்தேக நபர்கள் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து வாள்கள் 2, கைக்கோடரி 1, மோட்டார் சைக்கிள்கள் 2 மற்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் கைப்பற்றப்பட்டன. 21



## கொரோனா நேற்று 9

யாழ்ப்பாணம், ஜூலை 9
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை நேற்று 2 ஆயிரத்து 93ஆக அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு 24

## தடம்புரண்டது சிறீதேவி ரயில்

வவுனியா, ஜூலை 9
யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று அதிகாலை 3.45 மணியளவில் கொழும்பு நோக்கி பயணத்தை ஆரம்பித்த சிறீதேவி கடுகதி ரயில் காலை 5.50 மணியளவில் வவுனியாவின் எல்லையான ஈரப்பெரியகுளத்தில் ரயில் கடவையை விட்டு தடம் புரண்டதால் வடபகுதிக்கான ரயில் போக்குவரத்தில் தடங்கல் 21

### தேர்தல்கள் ஆணைக்குழுவின்

## உதவி ஆணையாளர் வாகனமும் சோதனை

### இராணுவத்தினர் அடாவடி

யாழ்ப்பாணம், ஜூலை 9
இராணுவத்தினரின் தலையீடுகள் அதிகரித்துள்ள அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்து 24 மணி நேரத்தினுள், உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் 24

## பதில் முதல்வரின் செயற்பாட்டால் ஆளும் கட்சிக்குள்ளே அதிருப்தி!

### ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் மாநகர சபையின் பதில் முதல்வர் து.ஈசன், மாநகர சபைக் கட்டளைச்சட்ட விதிமுறைகளுக்கு மாறாக இன்றையசபைக்கூட்டத்தைக் கூட்டியுள்ளமை தொடர்பில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்புவதற்கு ஆளும் கட்சியினர் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது. யாழ்ப்பாணம் 23

## டிப்பர், ஓட்டோ விபத்து மூவருக்குப் படுகாயம்

கொடிகாமம், ஜூலை 9
சங்குப்பிட்டி பாலத்தடியில் டிப்பரும் ஓட்டோவும் விபத்திற்கு உள்ளாகியதில் ஓட்டோவில் சென்ற மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா மருத்துவமனையில் 21

## தமிழ் மக்களின் உரிமையை எவரும் நிராகரிக்க முடியாது

### ராஜபக்ச அரசுக்கு சம்பந்தன் பதிலடி



கொழும்பு, ஜூலை 9
தமிழ் மக்கள் ஒரு நீண்டகால கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பின்பற்றி வருகின்றார்கள். அவர்களின் உரிமைகளை எவரும் நிராகரிக்கவே முடியாது. இதனை 23

# ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு சஜித்தின் நிலைப்பாடு அதுவே!

## ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 9**

**ஒற்றையாட்சிக்குள் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரங்களைப் பகிர்வதே சஜித் பிரேமதாஸவின் நிலைப்பாடாக இருக்கின்றது. மாறாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச கூறுவதுபோல் நாட்டைப் பிளவுபடுத்தும் எந்தவொரு நோக்கமும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரப்பகிர்வு தொடர்பான தனது நிலைப்பாட்டை சஜித் பிரேமதாச மிகவும் தெளிவாக அறிவித்துள்ளார். அதாவது ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களைப் பகிர்வதே அவரின் வேலைத்திட்டமாக இருக்கின்றது. எனவே, நாட்டைப் பிளவுபடுத்தும் செயலையோ அல்லது பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கையையோ அவர் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பில் உள்ள விடயமாகும். அதனை நடைமுறைப்படுத்துவதை சட்டவிரோத நடவடிக்கையாக கருதமுடியாது. மாகாணசபைகள் சுதந்திரமாக இயங்குவதற்கு உள்ள தடைகள் நீக்கப்பட வேண்டும். அதனை இந்த அரசு செய்திருக்கலாம். அதனைச் செய்யாமல் எம்மை நோக்கி விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது. அது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல, என்றார். (ஒ,5,44)



# நவாலி தேவாலயத்தின் மீது தவறுதலாகவே குண்டு வீச்சு

*இப்போது கூறுகிறார் சந்திரிக்கா*

யாழ்ப்பாணம், ஜூலை 9

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீது விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல் தவறாகவே இடம்பெற்றது எனக் குறிப்பிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, மக்கள் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்வதைத் தடுப்பது அடிப்படை உரிமை மீறலாகும் என்றும் தெரிவித்தார்.

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீது விமானப் படையினர் 1995ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி தாக்குதல் நடத்தியிருந்தனர். இதில் 147 பேர் வரையில் உயிரிழந்திருந்தனர். யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்கில் அப்போதைய சிறிலங்கா இராணுவத்தால் .மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து ஆலயத்தில் தங்கியிருந்த மக்கள் விமானப்படைக் குண்டு வீச்சில் சாவடைந்திருந்தனர். அவர்களை நினைவுகூர்ந்து நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்கு தடைவிதிக்குமாறு கோரி மானிப்பாய் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் விண்ணப்பம் செய்திருந்தனர். இது தொடர்பில் நேற்றுக் காலை கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீது விமானப் படையினர் தவறுதலாகவே குண்டு வீச்சு நடத்தினர். விமானப் படையினரின் இலக்காக தேவாலயம் இருக்கவில்லை. அந்தச் சம்பவம் நடைபெற்றதாகக் கேள்விப்பட்டதுமே விமானப் படையினரைக் கண்டித்தேன். உயிரிழந்தவர்களை நினைவுகூர்வது அடிப்படை உரிமை. அதை யாரும் தடுக்கக்கூடாது' என்றார். (ஒ,5,22)

# 13ஆவது திருத்தத்தை மக்களே தீர்மானிப்பர்!

## இப்படிச் சொல்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 9

இலங்கையில் மாகாண சபை முறையையும், அதிகாரப்பகிர்வு பொறிமுறையும் தோல்விகண்டுள்ளன. சமஷ்டிக் கட்டமைப்பையும் ஏற்கமுடியாது. அனைத்து இன மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய புதியதொரு அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இலங்கையில் சமஷ்டிப் பொறிமுறை நடைமுறைக்கு வருவதை ஜே.வி.பி விரும்புகின்றதா என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையை சமஷ்டி கட்டமைப்புடைய நாடாக மாற்றுவதற்கு நாம் என்றும் எதிர்ப்பு என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன். கடந்த ஆட்சியின்போது புதிய அரசமைப்பு உருவாக்கப்படவில்லை. அதற்கான யோசனைகளே முன்வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு முன்வைக்கப்பட்ட எந்தவொரு யோசனையும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கும் வகையிலேயே புதிய அரசமைப்பு அவசியம் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்ந்தும் தேவையானதா? என மக்களிடம் கருத்துக்கோர வேண்டும். ஏனெனில் மக்கள் ஆணையின்றியே 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

புதிய அரசமைப்பில் நாட்டின் ஒருமைப்பாடு, அனைத்து மக்களினதும் உரிமைகள் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதுடன், நவீன யுகத்துக்கேற்ற வகையிலான சரத்துகளும் உள்வாங்கப்படவேண்டும். ராஜபக்ச அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அன்று இருந்தது. ஆனால், புதிய அரசமைப்பை இயற்றவில்லை. 18ஆவது திருத்தச் சட்டமே கொண்டுவரப்பட்டது. அதேவேளை, அதிகாரப்பகிர்வு நடைமுறைத் தோல்வி கண்டுள்ளது. மாகாண சபைகளும் முறையாக இயங்கவில்லை. எனவே, அனைத்து இன மக்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்தக்கூடிய புதிய அரசமைப்பு வேண்டும், என்றார். (ஒ,5,44)



# கொரோனா 2ஆம் அலையை தடுக்க விழிப்பாக இருப்போம்

## சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவோம் என்கிறார் இராணுவத் தளபதி சவேந்திர

கொழும்பு, ஜூலை 9

இலங்கையில் கொரோனா பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தாலும், தொற்றாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்பதை மறந்துவிடக்கூடாது. இரண்டாம் அலை உருவாகாமல் இருப்பதற்கு மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்று இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுக் காலை தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதியொருவருக்கு கொரோனா தொற்று இருப்பது பி.சி.ஆர். பரிசோதனைமூலம் உறுதியானது. அவருக்கு எவ்வாறு வைரஸ் பரவியது என்பதை கண்டறிவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மறுபுறத்தில் இரண்டாம் அலை குறித்தும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இராணுவத்தளபதி மேலும் தெரிவித்ததாவது:

வெலிக்கடை சிறைச்சாலை சம்பவத்தையடுத்து 310 பேரிடம் நேற்று பிசிஆர் பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் 210 பேர் தொடர்பான முடிவு நேற்றுக் காலை கிடைத்தது. 210 பேருக்கும் வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதியானது.

அத்துடன், ஜனாதிபதி கோத்தாபய வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் 186 பேரை (தொற்றுக்குள்ளான கைதிகளுடன் இருந்தவர்கள், பழகியவர்கள், சிறைச்சாலை அதிகாரிகள்) பூனானி கொரோனா தடுப்பு முகாமுக்கு நேற்று அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கை கடற்படைக்கு உரித்தான வளாகத்தில் இவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டாலும் சிறைச்சாலை அதிகாரிகளின் கண்காணிப்பின்கீழ்தான் நடவடிக்கை இடம்பெறும். அதேபோல் 7 சிறைச்சாலை அதிகாரிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். சிறைக்கைதிக்கு எவ்வாறு கொரோனா பரவியது என்பது பற்றி ஆராயப்பட்டு வருகின்றது. இதன்படி கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் உள்ளவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டு வருகின்றது. நேற்றுமுன்தினம் இரவு இதற்கான பணி ஆரம்பமானது.

உலகில் சில நாடுகளில் இரண்டாம் அலை ஏற்பட்டு வைரஸ் வேகமாக பரவிவருகின்றது. இலங்கையில் சமூகத்தில் கொரோனா பரவுவதைக் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதிக்கு பிறகு நாம் தடுத்திருந்தாலும், கொவிட் - 19 தொற்றியவர்கள் இலங்கையில் இருக்கின்றனர். வெளிநாடுகளில் இருந்தும் வருகின்றனர் என்பதால் நாம் விழிப்பாகவே இருக்கவேண்டும். முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும், என்றார். (ஒ,5,44)

# இராவணன் தமிழரா? சிங்களவரா? முக்கியமல்ல அவர் இலங்கையர்

## எல்லாவ மேதானந்த தேரரின் கருத்துடன் முரண்படுகின்றது ராவணாபலய



கொழும்பு, ஜூலை 9


இராவணன் தமிழ் மன்னனா? சிங்கள மன்னனா? என்பது முக்கியமல்ல. அந்த மன்னன் இலங்கையன். இவ்வாறு தெற்கின் கடும்போக்குச் சிங்கள அமைப்பான ராவணாபலய அமைப்பின் பொதுச் செயலர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

கிழக்குக்கான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவ மேதானந்த தேரர் சில தினங்களுக்கு முன்னர் வழங்கிய நேர்காணலில், இராவண மன்னன் இலங்கையை ஆண்டான் என்பது கட்டுக்கதை என்று கூறியிருந்தார். இது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விஜயன் இலங்கைக்கு வரும்போது குவேனி இங்கிருந்துள்ளார். குவேனியின் படையணியே விஜயனையும் அவரது தோழர்களையும் சிறைபிடித்தது. குவேனியின் பரம்பரையை ஆராயும்போது இராவணன் என்பவர் தொடர்பில் தெரிய வந்தால் என்ன செய்வது? பலரும் பலவிதமாக கருத்துகளை வெளியிடலாம். இராவணன் இருந்தார் என்று நாம் நம்புகின்றோம். ராவணனுடன் 12 ஆண்டுகள் போர் நடந்ததாக இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தகவல் போலியெனில் எழுதியவர் அதனை உள்ளடக்கியிருக்க மாட்டார். புனையப்பட்ட கதையெனில் இந்தியாவுக்கு சார்பாகவே எழுதியிருக்கவேண்டும். இராவணனை ஒன்றரை மணிநேரத்தில் தீர்த்துக்கட்டினோம் என்று குறிப்பிட்டிருக்கவேண்டும். ஆனால். அவ்வாறு நடைபெறவில்லை. இராவண மன்னன் சிங்களவரா, தமிழரா என்பது முக்கியமல்ல. அவர் இலங்கைக்குரியவர், என்றார்.

(ஒ,5,44)



## திங்களன்று யாழ்ப்பாணம் வருகின்றார் தேசப்பிரிய

யாழ்ப்பாணம், ஜூலை 9

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய ஆணைக்குழு உறுப்பினர்களான சமன் தேசப்பிரிய, பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் ஆகியோர் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முக்கிய கலந்துரையாடல் நடத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் விதிமுறை மீறல்கள், தேர்தல் வன்முறைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்படலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. (ஒ,5)

### இராவணன் சிவபக்தன்:

## கோணேச்சரம் பற்றிய கருத்தால் இந்துக்களின் மனம் புண்படுகிறது

### இந்து மகா சபா வேதனை

கொழும்பு, ஜூலை 9

திருக்கோணேச்சரம் என்பது பாடல்பெற்ற திருத்தலமாகும். சிவன்கோவில் தொடர்பில் எல்லாவல மேதானந்த தேரர் வெளியிட்டுள்ள கருத்தானது கண்டிக்கத்தக்கது. இது தொடர்பில் ஆலய நிர்வாகம் உரிய பதிலை வழங்கவேண்டும் என்பதுடன் புத்தாசன அமைச்சுக்கு சான்றுகளையும் சமர்ப்பிக்கவேண்டும், என்று அகில இலங்கை இந்து மகா சபாவின் தலைவரும், மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் பொதுச் செயலருமான சிவசிறீ வேலு சுரேஷ்வர சர்மா தெரிவித்தார்.

திருக்கோணேச்சரம் கோவில் என்பது கோகண்ண விகாரை என்றே கூறப்படுகின்றது என எல்லாவல மேதானந்த தேரர் வெளியிட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் நேற்றுக் கருத்து வெளியிடுகையிலேயே சுரேஷ்வர சர்மா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருக்கோணேச்சரம் தொடர்பில் தேரர் வெளியிட்டுள்ள இவ்விதமான கருத்தானது இந்து மக்களின் மனதை புண்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

இலங்கையானது இராவணன் ஆண்ட பூமியாகும். அதற்குச் சான்றாக சீதாஎலிய கோவில் இருக்கின்றது. இந்தியாவில் இருந்து அனுமான் இலங்கை வந்ததற்கான ஆதாரம் இருக்கின்றது. ராவண எல்ல இருக்கின்றது. குகைகள் இருக்கின்றன. இராவணன் என்பவன் சிவபக்தன். இதற்கான சான்றுகளும் உள்ளன. இந்நிலையில் தேரர் வெளியிட்ட கருத்துகள் கண்டிக்கத்தக்கவை. இந்துமத குரு என்ற அடிப்படையில் கவலையும் அடைகின்றேன். எனவே, ஆலய நிர்வாகத்தினர், ஆதாரங்களை புத்தாசன அமைச்சுக்கு வழங்குவதன்மூலம் ஏதோவொரு தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியும் என நம்புகின்றேன், என்றார்.

(ஒ,5,44)



இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்



# மஹிந்த தரப்புடன் இணைந்து ஆட்சியமைக்க வாய்ப்பில்லை

*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்*

கொழும்பு, ஜூலை 9
மஹிந்த ராஜபக்ச தரப்புடன் இணைந்து ஆட்சி அமைப்பதென்பது சாத்தியமற்றதாகும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்த ராஜபக்ச தரப்புடன் நாம் டீல் ஒன்றைச் செய்து கொண்டிருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். உண்மையில் ஒருபோதும் நாம் மஹிந்த தரப்புடன் இணைந்து ஆட்சி அமைக்க மாட்டோம். ஏனெனில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதையே நாம் மிக முக்கிய இலக்காகக் கொண்டிருக்கின்றோம். ஆனால் மஹிந்த தரப்பின் பொருளாதாரக் கொள்கைகளும், எமது பொருளாதாரக் கொள்கைகளும் முற்றிலும் முரணானவை. ஆகவே அவர்களுடன் இணைந்து ஆட்சி அமைப்பதென்பது சாத்தியமற்றதாகும்.

அத்துடன் இம்முறை பொதுத்தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பின்போது அரச ஊழியர்கள் நன்கு சிந்தித்து வாக்களிப்பது அவசியமாகும். ஆளுந்தரப்பினர் தமக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுத்தருமாறுகோரி தேர்தல் பரப்புரையில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு அத்தகைய பெரும்பான்மை நிச்சயமாகக் கிடைக்காது என்பது ஒருபுறமிருக்க, அவர்கள் எதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோருகின்றனர் என்பது குறித்தும் கவனத்திற்கொள்ள வேண்டும் - என்றார். (ம)

## இயக்கச்சி வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவர் நேற்று மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 9
பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை 4.50 மணியளவில் அநுராதபுரம் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி இயக்கச்சியில் வீடொன்றில் உள்ளூர் வெடிகுண்டை தயாரிக்க முற்பட்டபோது ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த சந்தேகநபர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார். அவர் 44 வயதான முன்னாள் போராளி என்பதுடன், இவருடன் தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் தலா ஒவ்வொருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். உயிரிழந்தவரின் மனைவியும் சந்தேகத்தில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,6)

### வடமராட்சி கிழக்கில்

# சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட பத்துப் பேர் நேற்றுக் கைதாகினர்

வடமராட்சி, ஜூலை 9
**வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட வெளிமாவட்ட மீனவர்கள் பத்துப் பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். புத்தளம், சிலாபம், மன்னார் கற்பிட்டி பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர்.**

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத மீன்பிடியும், தெற்கு மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகளும் தொடர்ந்து வருகின்றன. இதனால் வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கும் தெற்கு மீனவர்களுக்கும் இடையில் அவ்வப்போது முரண்பாடுகள் இடம்பெறுவது வழமை. இந்த நிலையில் மேற்படி 10 மீனவர்களும் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கும் வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியது என்றும், நீரியல் வளத் திணைக்களத்தினரும் பொலிஸாரும் இணைந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு பிரச்சினையை கட்டுக்குள் கொண்டுவந்தனர் என்றும் சொல்லப்படுகின்றது. (ம-20)

## பாரம்பரியத்தைத் தனிமைப்படுத்தாது இருப்போம் எனும் தொனிப்பொருளில் தொல்பொருள் மாநாடு

கொழும்பு, ஜூலை 9
தொல்பொருள் துறையில் செயற்பாட்டுடன் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்களின் அண்மைகால ஆராய்ச்சிகளின் முடிவுகள், கண்டுபிடிப்புகள் மற்றும் தொல்பொருள் துறையின் தற்போதைய நிலை தொடர்பாக கல்விசார் உரையாடல் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் தேசிய தொல்பொருள் மாநாடு நேற்று முற்பகல் இலங்கை மன்றக் கல்லூரியல் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நடைபெற்றது.

ஜூலை மாதம் 7ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்ட தேசிய தொல்பொருள் தினத்தை முன்னிட்டு, பாரம்பரியத்தை தனிமைப் படுத்தாதிருப்போம், எனும் தொனிப்பொருளில் இம்முறை தேசிய தொல்பொருள் மாநாடு இடம்பெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தேசிய தொல்பொருள் மாநாட்டை ஆரம்பித்து மங்கள விளக்கு ஏற்றிவைத்தார். தொடர்ந்து தேசிய தொல்பொருள் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் மர நடுகை வேலைத்திட்டத்திற்கு அமைய மன்றக் கல்லூரி வளாகத்தில் மரக் கன்றொன்றும் நடப்பட்டது.

குறித்த நிகழ்வில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பௌத்த கலாசார மற்றும் மத விவகார அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ் சந்திர, தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் செனரத் திசாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர். (ம)

# தமது ஊதிய விவகாரங்களை சிந்தித்து அரச ஊழியர்கள் வாக்கிடல் வேண்டும்!


*முன்னாள் அமைச்சர் மனோகணேசன் கோரிக்கை*

கொழும்பு, ஜூலை 9
அரசு, அரச அலுவலர்களின் மேலதிக கொடுப்பனவுகளை நிறுத்திவைத்து அவர்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயங்களைச் சிந்தித்து தமது வாக்குகளை அரச அலுவலர்கள் பயன்படுத்த வேண்டும் இவ்வாறு வலியுறுத்தினார் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் மனோகணேசன்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச உத்தியோகத்தர்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர். அரசின் இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் பெரும்பாலான சிங்கள அரச அலுவலர்கள் வெறுப்படைந்துள்ளனர். இந்த மாற்றத்தில் தமிழ் மொழிபேசும் அரச அலுவலர்களும் பங்குகொள்ள வேண்டும் என்று விரும்புகின்றேன்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகவே விசேட கொடுப்பனவு மற்றும் மேலதிக கொடுப்பனவுகளை நிறுத்தியுள்ளதாக தெரிவித்தாலும், நாங்கள் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து வரவுசெலவுத் திட்டத்தின்மூலம் ஒதுக்கிவைத்தை 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பை அரசு நிறுத்த முடிவெடுத்தபோது நாட்டில் வைரஸ் பரவல் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் பெரும்பாலான அரச அலுவலர்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வெற்றிக்காகவே வாக்களித்திருந்தனர். இம்முறையும் இவ்வாறான ஒரு முடிவை எடுத்துவிட்டு பின்னால் வருந்துவதில் எந்தப் பயனும் கிடைக்காது. அதனால் நன்கு சிந்தித்து வாக்களியுங்கள் - என்றார். (ம)



## தேடப்பட்டவர் நவாலியில் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூலை 9
பொலிஸாரைக் கண்டவுடன் தப்பியோடினரென்று கூறி இருவரை மானிப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவர்களில் விக்டர் டிலான் என்பவர் வீடு மீது பெற்றோல் குண்டு வீசிய வழக்கில் சந்தேகநபராக உள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், அவருடன் பிடிபட்ட தனுரொக் மீது எந்தவொரு வழக்கும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவித்தனர்.

பொலிஸார் நவாலியில் நேற்றுமாலை சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அந்தநேரம் அங்குவந்த இருவரும் பொலிஸாரைக் கண்டவுடன் தப்பி ஓட முற்பட்டனர். அதன்போதே இருவரும் பிடிக்கப்பட்டனர். இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விக்டர் டிலான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (த26,20)

# கொவிட் 19 தடுப்பூசி ஓகஸ்ட் மாதத்தில் அறிமுகப்படுத்துகிறது இந்தியா !



**புதுடில்லி, ஜுலை 9**
**கொவிட் 19 வைரஸுக்கான தடுப்பூசி எதிர்வரும் ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் இந்தியாவால் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கொவிட் 19 வைரஸ் காரணமாக இதுவரை உலகில் அதிகூடிய உயிரிழப்புக்களைச் சந்தித்த நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தை எட்டியுள்ளது. இந்நிலையிலேயே இத் தொற்றைக் கட்டுப்படுத்த இந்தியாவின் பிரபல மருந்துத் தயாரிப்பு நிறுவனமான பாரத் பயோடெக்ஸ் இன்ரர் நஷனல் நிறுவனம் வைத்திய ஆய்வுகள் தொடர்பான இந்திய கவுன்சிலுடன் இணைந்து தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.
இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள வேறு நாடுகளின் பல ஆராய்ச்சி நிறுவனங்கள் இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியி லேயே குறித்த தடுப்பு மருந்தை கண்டுபிடித்து அறிமுகப்படுத்தமுடியுமென தெரிவித்துள்ள நிலையில், இந்திய ஆராய்ச்சியாளர்கள் இன்னும் சில வாரங்களில் குறித்த தடுப்பூசி மருந்தை அறிமுகப்படுத்தவுள்ளமை மருந்துவத்துறை சார் விற்பன்னர்கள் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. கொவைச்சீன்(covaxin) என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் தடுப்பூசி மருந்தை மனித உடல்களில் செலுத்திப் பரிசோதிக்கும் முயற்சி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வழக்கமாக இத்தகைய ஆராய்ச்சி முயற்சிகளில், முதலில் மிருகங்களின் உடல்களில் மருந்தைச் செலுத்தி ஆராய்ந்து அதன் பின்னரே மனிதர்களது உடல்களில் அது மூன்று வெவ்வேறு கட்டங்களாக கால இடைவெளிவிட்டு பரீட்சித்துப் பார்க்கப்படும்.
இத்தகைய நிலையில் குறுகிய கால இடைவெளிக்குள் இந்திய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுகளின் முடிவில் குறித்த தடுப்பூசி மருந்தை பொதுமக்களுக்கு பயன் படுத்தத் தீர்மானித்துள்ளமை சில மருத்துவ விஞ்ஞானிகளது விமர்சனத்துக்கும் உள் ளாகியுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ரி3)

## கங்கையிலிருந்து இரு சடலங்கள் மீட்பு!

பெல்மடுல்ல, ஜுலை 9
கங்கையொன்றிலிருந்து ஆண்கள் இருவரின் சடலங்கள் நேற்றுக் காலை மீட்கப்பட்டுற்ளன.
பெல்மடுல்ல தெனவக கங்கையிலிருந்தே மேற்படி இரண்டு ஆண்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள் ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)




# 892 கடற்படையினர் குணமடைவு!

கொழும்பு, ஜுலை 9
நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேலும் 4 கடற்படையினர் பூரண குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர் என கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
அதன்படி, இதுவரையில் 892 கடற்படையினர் பூரண குணமடைந்துள்ளனர் என கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2)



## ரஷ்ய யுவதி மீது பாலியல் இம்சை சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜுலை 9
கொழும்பு கோட்டை, காலிமுகத்திடலில் ரஷ்ய நாட்டு யுவதி ஒருவரை பாலியல் இம்சை களுக்கு உட்படுத்தியதுடன், அவரது இலங்கை நண்பரையும் தாக்கினர் எனக் கூறப்படும் சம்ப வம் தொடர்பில், 5 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சந்தேகநபர்கள் ஐவரும் இன்று கோட்டை பொலிஸாரால், கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை எதிர்வரும் வெள்ளியன்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த உத்தரவிட்ட நீதிவான், அதற்காக அவர்களை அன்றைய தினம் ஆஜர் செய்ய சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுளார்.
கடந்த 5 ஆம் திகதி ஞாயிறன்று இரவு 11 மனியளவில், காலி முகத்திடலுக்குச் சென்ற ரஷ்ய யுவதி மற்றும் அவரது இலங்கை நண்பர் மீதே குறித்த பாலியல் இம்சை, மற்றும் தாக்குதல் இடம்பெற்றதாக கோட்டை பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. அவர்களின் முறைப்பாட்டுக்கு அமைய, குறித்த ரஷ்ய யுவதி தனது தொலைபேசியில் பதிவு செய்த வீடியோ ஆதாரத்தை மையப்படுத்தி பொலிஸார் பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட ஐவரைச் கைதுசெய்திருந்தனர்.
அவர்கள் கொழும்பு 2 கொம்பனித் தெரு பகுதி யைச் சேர்ந்தவர்கள் எனவும், மேலும் சிலரைத் தேடிவருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்நிலையிலேயே நேற்றையதினம் கைதுசெய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களும் கோட்டை நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர். இதன்போதே அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவானால் உத்தரவிடப்பட்டது. (ரி3)

# மீண்டும் ரயில் சேவை ஆரம்பம்!

கொழும்பு, ஜுலை 9
கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட நாட்டின் பல ரயில் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை ரயில்வே திணைக்களம் முடிவு செய்துள்ளது.
அதன்படி, கல்கிஸையிலிருந்து கொழும்பு, கோட்டை முதல் காங்கேசன்துறை வரையிலான இலக்கம் 4022 ரயில், அதிகாலை 5.10 மணிக்கு புறப்பட்டு, ஜுலை18, 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் பிற்பகல் 1.15 மணிக்கு காங்கேசந்துறையில் இருந்து கல்கிஸை நோக்கி புறப்படும். இதற்கிடையில் கொழும்பு, கோட்டையிலிருந்து பதுளை செல்லும் இலக்கம் 1001 ரயில், ஜுலை 18,19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் காலை 6.45 மணிக்கு கொழும்பிலிருந்து புறப் படும். அந்த ரயில்களுக்கு ஆசன முன்பதிவு களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ரி2)

## போதைப்பொருள்களின் இருப்பு தொடர்பில் விசாரணைகள்

கொழும்பு, ஜுலை 9
பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் களஞ்சியத்தில் காணப்படும் போதைப்பொருள்களின் தொகை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த நடவடிக்கைக்கு அரச இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்தின் உதவி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தில் உள்ள அதிகாரிகள் சிலர் பொலிஸாரினால் கைப்பற்றப்படுகின்ற போதைப் பொருள்களை, மீளவும் போதைப்பொருள் வியாபாரிகளிடம் வழங்குவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையினால், இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ரி2)

## வெவ்வேறு தாக்குதல் சம்பவங்கள்: ஐவர் வைத்தியசாலையில் அனுமதி

சாவகச்சேரி, ஜுலை 9
பல்வேறு இடங்களில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த பெண் உட்பட ஐவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதல் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி கல்வயல் , கெருடாவில், மட்டுவில் மத்தி மற்றும் கொடிகாமம் பாலாவி தெற்கு ஆகிய இடங்களில் இடம்பெற்றுள்ளன.
கல்வயல் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் 20,17 வயது இளைஞர் இருவரும், மட்டுவில் மத்தியில் இடம்பெற்ற சம்பவத்தில் 28 வயது பெண்ணொருவரும், கெருடாவிலில் இடம்பெற்ற சம்பவத்தில் 45 வயது குடும்பஸ்தரும், பாலாவி தெற்கில் இடம்பெற்ற சம்பவத்தில் 55 வயது குடும்பஸ்தரும், காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ரி-19)

# வீதி விபத்துக்களால் 7 மாதங்களில் 21 பேர் சாவு

## கிளிநொச்சியில் இந்த நிலை

**கிளிநொச்சி, ஜூலை 9**

**கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து இன்றுவரை 21 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர். இந்த மாதத்தின் கடந்த 7 நாள்களில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், 7 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். வீதி விபத்துக்கள் தொடர்பில் பொது மக்களும், அதிகாரிகளும் வாகனங்களைச் செலுத்துகின்றவர்களும் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று கிளிநொச்சி வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் கெ.ராகுலன் தெரிவித்தார்.**




கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையிலே இடம்பெறுகின்ற இறப்புக்களில் மூன்று வீதமான இறப்புக்கள் வீதி விபத்துக்களாலேயே இடம்பெறுகின்றன. அந்த வகையிலே கிளிநொச்சி மாவட்டத்தில் இம்மாதத்தின் கடந்த வாரத்தில் மட்டும்மூன்று பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டமானது வடக்கு மாகாணத்தின் மையப் பகுதியில் உள்ளதுடன், ஏ9 நெடுஞ்சாலை குறுக் கறுத்துச் செல்லும் ஒரு பகுதியாகவும் காணப்படுகின்றது. இதனால் அதிகம் விபத்துக்கள் இடம்பெறுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் எவ்வாறு விபத்துக்களைக் குறைக்க முடியும் என்பது பற்றி மாவட்டச்செயலர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஒன்று கூடி பிராந்திய மட்டத்தில் தீர்மானங்களை எடுத்து அவற்றை ஆளுநருக்கு சமர்ப்பிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஏ9 வீதியில் மையப்பகுதியிலே இந்த வைத்தியசாலை இருப்பதனால் நாளாந்தம் விபத்துக்களால் ஏற்படுகின்ற காயங்கள், மற்றும் விபத்து தொடர்பான சிகிச்சைகளுக்காக பெருமளவானோர் இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே சிகிச்சை வழங்கவேண்டிய பொறுப்பு இருக்கின்றது அதனை இங்குள்ள வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் முன்னெடுத்து வருகின்றனர். இந்த வைத்தியசாலைக்குதனியானவிபத்துப்பிரிவு இதுவரை இல்லை. அதனால் விபத்துப் பிரிவு என்பது மிக அவசர தேவையாக உள்ளது. வைத்தியசாலையிலே உள்ள மயக்க மருந்து நிபுணர்கள், சட்ட வைத்திய நிபுணர்கள், தோல் வைத்திய நிபுணர்கள், உளநல வைத்திய நிபுணர்கள், பொது வைத்திய நிபுணர்கள். மருத்துவமனைப் பணியாளர்கள் என அனைவரும் தமது சேவைகளை கால நேரம் பாராது வழங்கி வருகின்றனர் - என்றார். (ப-6,35)



## ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுவிலில் நேற்று திறப்பு

சாவகச்சேரி, ஜூலை 9

நுணாவில் பிரதேச கர்ப்பவதிகள் ,பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கான ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பண்டிதர் சிவலிங்கம் நினைவு இலவச மருத்துவ சேவை நிலையத்துக்கு மாற்றப்பட்டு, நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பிரதேச நலன்விரும்பியான திருமதி சர்வேஸ்வரி பாக்கியலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார், மேற்பார்வை குடும்பநல சேவையாளர் திருமதி எம்.ரஞ்சிதமலர் ,சாவகச்சேரி நகரசபைபொதுச் சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜ் உட்பட பலர், கலந்துகொண்டனர்

நுணாவில் பிரதேச மக்களுக்கான ஆரம்ப சுகாதார நிலையம் இதுவரை காலமும் நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்று வந்தது. தற்போது நிலையத்தின் கட்டட. வேலைகள் நடைபெற்று வருவதால் மட்டுவில் தெற்கில் உள்ள புதிய நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (ப-131,9)

## பெயர்ப்பலகை திரைநீக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் இலத்திரனியல் கற்றல் மென்பொருள் தயாரிக்கும் அலகின் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யும் நிகழ்வு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர் ஆனந்தா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்தார். சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி. ஜோன் குயின்ரஸ், மற்றும் கணக்காளர் ம. ஜெயக்குமார், தகவல தொழில் நுட்பப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். தர்மசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கற்றல் மென்பொருள் தயாரிக்கும் அலகினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த உயர்தர விஞ்ஞான பாடசுய கற்றல் மென்பொருள்கள் எல்.எம்.டி.எம் யுனிற் யூரியூபில் தரவேற்றம் செய்யப்பட்டள்ளன. இவ்வரும்க.பொ.த சாதாரணதரத்துக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு பிரதான பாடங்களுக்கான எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மீட்டல் செயற்பாடுகளை, ஓகஸ்ட் மாதத்திலிருந்து தரவேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று அறிவிக்கப் பட்டது. (ப)




## கிளி. மருத்துவமனையிலிருந்து மாதாந்தம் 30 பேர் போதனாவுக்கு

### போதிய வசதியின்மையால் இந்த நிலை

போதிய வசதிகள் இல்லாமையால் கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு நோயாளர்களை அனுப்ப வேண்டிய நிலை காணப்படுகின்றது என என்பு முறிவு, நெரிவு சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் சி.சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் என்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இருந்தபோதும் வைத்தியசாலையில் ஸ்கானர் வசதி இன்மையால் மாதாந்தம் 30 பேர்வரையில் யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலைக்கு இங்கிருந்து அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதனால் அந்த வைத்தியசாலையிலும் நோயாளர்கள் அதிகரித்து நெருக்கடிகள் ஏற்படுகின்றன. வீதி விபத்துக்களால் ஏற்படுகின்ற காயங்கள் மற்றும் முறிவுகளுக்குள்ளாகும் அதிகளவானோர் இங்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். ஆனால் வைத்தியசாலையில் போதிய வசதிகள் இல்லை. அவ்வாறு வசதிகள் காணப்பட்டால் மக்கள் வைத்திய சேவையை முழுமையாகப் பெற்றுக்கொடுக்க முடியும் . வைத்தியசாலைக்கான விபத்துப் பிரிவு இல்லாமையால் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனினும் வைத்தியசாலையில் உள்ள வசதிகளைக்கொண்டு விபத்துக்களுக்குள்ளாகி அனுமதிக்கப்படுகின்ற நோயாளர்களுக்கு சிகிச்சைகளை வழங்கி வருகின்றோம். விபத்துப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு வளங்கள் பெற்றுத் தரப்படும் சந்தர்ப்பத்தில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் நிறைவான சேவையை முன்னெடுக்க முடியும் - என்றார். (ப-35,6)

## சாரதிகள் 7 பேருக்கு 2,82,500 ரூபா தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 9

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 7 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 2 லட்சத்து 82 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

விசாரணையின் போது மதுபோதையில் ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய நபரொருவருக்கு77ஆயிரத்து500 ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்தியமை சாரதிய அனுமதிப்பத்திரம் இன்மை , கவனமின்றி வாகனம் செலுத்தி யமை,பொலிஸாரின் சமிக்ஞையை மீறியமை ஆகியக் குற்றங்க ளுக்காக ஒருவருக்கு 55 ஆயிரம் ரூபாவும் , மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபரொருவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் , மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது . (ஐ-9)

## நான்கு வர்த்தகர்களுக்கு ரூபா 15 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி,ஜூலை 9

கோரோனா காலத்தில் பாவனையாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உணவுப் பொருள்களை விற்பனை செய்த நான்கு வர்த்தகர்களுக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர்கள் அதிகார சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றால் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட் டன.

நான்கு வர்த்தகர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்ட தையடுத்து அவர்களுக்கு முறையே ரூபா 6 ஆயிரம், ரூபா 4 ஆயிரத்து 500, ரூபா 3 ஆயிரம், ரூபா ஆயிரத்து 500 தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உரிமைக்குப் போராடும் மக்களின் பேராயுதம் விருப்பு வாக்குகளே!

நாம் உரிமை பறிக்கப்பட்டு ஒரு இனமாக இருந்தபோதும் சகல உரிமைகளையும் கொண்ட ஒரு சுதந்திரதேசத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து வரலாறு படைத்தவர்கள். சர்வதேச சதியில் எமது ஆயுதப் போர் மௌனிக்கப்பட வைக்கப்பட்ட போதிலும் எமது உரிமைகளைப் பெற ஜனநாயகப் போராட்டத்தில் முன்செல்பவர்கள் நாம்.

எமது ஜனநாயகப் போரின் தளபதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்து அவர்கள் தலைமையில் தடம் மாறாது பயணிக்க வேண்டியது எமது கடமை.

உருக்குப் போன்ற இலட்சிய உறுதியும் எதிர்கொள்ளும் சவால்களுக்குதுணிச்சலுடன் முகம் கொடுத்து முன்செல்லும் அர்ப்பண உணர்வும் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே எமது ஜனநாயகப் போரின் தளபதிகளாகத் தலைமை தாங்க வேண்டியவர்கள்.

அப்படியான ஆற்றலும் தியான உணர்வும் கொண்டவர்களைத் தெரிவு செய்ய வேண்டியது எமது தார்மீகக் கடமை. தொகுதிவாரித் தேர்தலில் ஒவ்வொரு தொகுதிகளிலும் கட்சிகள் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நாம் கட்சியை ஆதரிக்கும் போது அந்த வேட்பாளர் எமது விருப்பத்துக்கு உரியவராயிருந்தாலும் இல்லாவிட்டாலும் வாக்களிக்கத்தான் வேண்டும். இப்போது இடம்பெறுவது விகிதாசாரத்தேர்தல்! எமது கட்சி நியமிக்கும் பல வேட்பாளர்களில் மூவரைத் தெரிவு செய்யும் உரிமை உண்டு. இங்கு நாம் எமது கட்சிக்கு வாக்களிக்கும் அதே வேளையில் எமக்கு விருப்பமான வேட்பாளருக்கு மட்டுமே வாக்களிக்கவும் முடியும். எனவே இலட்சியப் பற்றுறுதி கொண்டவர்களையும் எமது உரிமைப் போராட்டத்தில் தடம்மாறாத தலைமை தாங்கிச் செல்லக் கூடியவர்களையும் தெரிவு செய்யும் வரப்பிரசாதத்தை விருப்பு வாக்குகள் தந்துள்ளன.

இன்று வேட்பாளர்களாக எம்முன் எமது புனிதமான விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த தலைவனையும் உயிரை அர்ப்பணித்த மாவீரர்களையும் தியாகங்களால் புடம்போடப்பட்ட போராளிகளையும் பயங்கரவாதிகள் எனவும் போர்க் குற்றவாளிகள் எனவும் சகோதரப் படுகொலையாளிகள் எனவும் கொச்சைப்படுத்தி பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துபவர்களும் வந்துள்ளனர். இலட்சிய உறுதியும் உரிமைப் போராட்டத்தில் தளராத உறுதியும் மக்கள் பணியில் தம்மை அர்ப்பணித்து துணிவுடன் எமது ஜனநாயகப் போராட்டத்தை முன்னெடுப்பவர்களும் எம்முன் வேட்பாளர்களாக வந்துள்ளனர்.

ஒரே கட்சியில் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரிக்கும் சக்திகள், அதே உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் சக்திகள் என இரு துருவங்கள் எம்முன் நிற்கின்றன. நல்ல சக்திகளுக்கு வாக்களித்து அவர்களுக்கு கரம் கொடுக்கவும் தீயசக்திகளை விரட்டியடிக்கவும் விருப்பு வாக்குகள் எமக்கு வாய்ப்பை வழங்கியுள்ளன. எனவே எமது விருப்பு வாக்குகளை உரிய முறையில் பயன்படுத்தி உரிமைப் போரை இதய சுத்தியுடன் முன்னெடுக்கும் தியாக சிந்தையும் அர்ப்பண உணர்வும்கொண்ட வேட்பாளர்களைத் தெரிவு செய்வதன் மூலம் எமது உரிமைப் போராட்டத்தைச் சரியான திசையில் வெற்றியை நோக்கி முன்னெடுப்போம்.



# திரிபோஷாவுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 9



வயதுக்கேற்ற நிறை குறைந்த குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வரும் 'திரிபோஷா' குழந்தைகள் ஊட்டச்சத்து மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று குடும்பநல உத்தியோகத்தர் சங்கத் தலைவி தெரிவித்துள்ளார்.

குழந்தைகளுக்கென மாதாந்தம் இரண்டு பைக்கற்றுக்கள் வீதம் "திரிபோஷா" மா வழங்கப்படுவது வழக்கமாயினும் கடந்த மே மாதம் முதல் குறைந்த அளவிலேயே விநியோகம் இடம் பெறுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைகுறைந்த குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார் ஆகியோரது போசணை நிலையை உயர்த்துவதற்காக அரசு மாதாந்தம் இந்தத் தரப்பினர்களுக்கு 'திரிபோஷா' ஊட்டச்சத்து மா பக்கெட்டுகளை இலவசமாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது . (ச)

## 8 மாதங்கள் சாதிக்காத அரசு இனியென்ன சாதித்துவிடும்?

### கேள்வி எழுப்புகிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 9



8 மாதங்களாக எதனையும் சாதித்துவிடாத அரசாங்கம், அடுத்த 5 வருடங்களுக்குள் எதனை புதிதாக சாதித்துவிடப் போகிறது என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுபோவில பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தாமரை மொட்டு அரசாங்கம் இன்று எதனைச் செய்கிறது? மக்களிடமிருந்து பணத்தைக் கொள்கையடிக்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தைக்கூட மூன்று மடங்காக அதிகரித்து, அதனைச் செலுத்துங்கள் என்று கூறுகிறார்கள். மக்களிடம் பணம் இல்லாமல், எவ்வாறு செலுத்துவார்கள்?. சில நாடுகளில் கொரோனா காலத்தில் மக்களுக்கு பணத்தைக் கொடுக்கிறார்கள்.

ஆனால், இலங்கையிலோ அது தலைகீழாக இடம்பெற்று வருகிறது. ஆட்சிக்கு வந்து 8 மாதங்களில் சாதிக்காத இந்த அரசாங்கம், அடுத்த 5 வருடங்களில் எதனை சாதித்து விடப் போகிறது என கேட்க விரும்புகிறேன். இவற்றை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்-என்றார். (எ)

## வைத்தியசாலை பணியாளர் இலஞ்சம் பெற்றபோது கைது

கொழும்பு, ஜூலை 9

அக்கரைப்பற்று அடிப்படை வைத்தியசாலையின் சிறுசேவைக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் இலஞ்சம் வாங்கியபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து வந்திருந்த இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நேற்றுக்காலை வைத்தியசாலை முன்பாக வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் பணிபுரியும் சுகாதார உதவியாளர் ஒருவரை, அதே வைத்தியசாலையின் வேறு பிரிவுக்கு மாற்றுவதற்காக அவர் 15 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகக் கேட்டிருந்தார் என்றும், நேற்றுக்காலை அவர் சுகாதார உதவியாளரிடம் இருந்து 10 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றபோது அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## விடுதலையான 100 பேரின் விவரங்கள் சேகரிப்பு

வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் தங்கியிருந்து விடுதலையாகிய நூறு பேர் தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களம் தகவல் சேகரித்து வருகின்றது. அத்துடன் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையின் முதலாவது விடுதியில் தங்கியிருந்த 189 சிறைக்கைதிகள் பூனானி தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக சிறைச்சாலை திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட வெலிக்கடை சிறைக்கைதி, சிறைச்சாலை வைத்தியசாலை முதலாம் விடுதியில் தங்கியிருந்த நாள் முதல் நேற்றுமுன்தினம் 7ஆம் திகதிவரை அவருடன் தங்கியிருந்த கைதிகள் தொடர்பான தகவல்களை சிறைச்சாலை திணைக்களம் சேகரித்து வருகின்றது.

தொற்று உறுதிப்படுத்தப்பட்ட கைதி தங்கியிருந்த நாள் முதல் இதுவரை கைதிகள் 100 பேர்வரை விடுதலையாகி அவர்களின் இல்லங்களுக்கு சென்றிருக்கின்றனர் என்று தெரியவருகின்றது. மேலும் 8 கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றியனுப்பப்பட்டிருக்கின்றனர். இவர்களில் இருவர் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். மொனறாகலை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்த 3 பேரும் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## போதை ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு மறியல்

கொழும்பு, ஜூலை 9

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் 13 அதிகாரிகளையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

சந்தேகநபர்கள் நேற்று புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர்களை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர்களில் நேற்றுமுன்தினம் கைதான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் அடங்குகின்றார் என்று குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் 18 அதிகாரிகள் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார். (எ)

# தங்கள் சுயநலத்துக்காக வீட்டை உடைத்தோரை நிராகரியுங்கள்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஈ.சரவணபவன் அறைகூவல்



**யாழ்ப்பாணம், ஜூலை 9**

**தலைமைத்துவ ஆசையுடன், தங்களைப் பற்றி மட்டும் சிந்தித்துச் செயற்பட்டவர்களால் இன்று தமிழ் பேசும் மக்களின் ஐக்கியம் சிதைந்து சின்னாபின்னமாகியுள்ளது. தாங்கள் தலைவராக வேண்டும் என்ற சுயநலத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துச் சென்றவர்களுக்கு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.**

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வீட்டுச் சின்னத்தில் 4ஆம் இலக்க வேட்பாளராகக் களமிறங்குபவருமான ஈ.சரவணபவன் நேற்றுமுன்தினம் மக்கள் சந்திப்புக்களை மேற்கொண்டார். அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக அத்திபாரம் இட்டுக் கட்டப்பட்ட வீடு. அதை உடைத்துச் சேதப்படுத்தி விடலாம் என்று சிலர் நினைக்கின்றனர். அது வெறும் பகல் கனவே.

அஞ்ஞானவாசம் போகிறேன் என்றவரை அழைத்து ஆளாக்கியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. தங்களை ஏற்றிவிட்ட ஏணியை உதைத்து விட்டவர்கள் எவ்வாறு நம்பிக்கைக்கு உரியவர்களாக இருப்பார்கள்?. எதிர்காலத்தில் தங்கள் நலனுக்காக தற்போது ஒட்டிக்கொண்டிருப்பவர்களையும் உதற மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?. இதையெல்லாம் எங்கள் மக்கள் நன்கு புரிந்து வைத்துள்ளனர்.

இவர்கள் அனைத்து மேடைகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சனம் செய்வதையே தங்கள் தலையாய கடமையாகக் கொண்டுள்ளனர். தாங்கள் மக்களுக்கு என்ன செய்தனர் என்பதைக் கூறுவதில்லை, என்ன செய்யப்போகின்றோம் என்று கூறுவதில்லை. ஆனால் இவர்கள் மேடைக்கு மேடை பேசுவதால் தமிழ்த் தேசியக் கூட்டமைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்துள்ள சேவைகளை மக்கள் அறிவார்கள்.

நான் ஒன்றும் உங்களுக்குப் புதியவன் அல்லன். கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் உதயன் ஊடாக ஒவ்வொரு வீடுகளுக்கும் தினசரி தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு வாழ்பவன். அரச பயங்கரவாதிகளால் ஒரு முறை அல்ல 40க்கும் மேற்பட்ட தடவைகள் துரத்தித் துரத்தி அடிக்கப்பட்ட போதும் நான் ஓடி ஒளிந்து கொள்ளவில்லை. உங்களுடனேயே நின்று முகம்கொடுத்தவன். உங்களில் ஒருவனான எனக்கு நீங்கள் ஆதரவளிக்க வேண்டும். வீட்டுச் சின்னத்துக்கும் எனது 4ஆம் இலக்கத்துக்கும் புள்ளடி இட்டு வெற்றியடையச் செய்யும்படி உரிமையுடன் கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (எ)

---

## புதிய வேட்டாளர்களுக்கு வாக்களியுங்கள்

### சிவசேனை அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 9

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் புதிய வேட்பாளர்களுக்கும், இளைஞர்களுக்கும் பொதுமக்கள் வாக்களிக்க வேண்டும் என்று சிவசேனா அமைப்பின் வன்னி பிராந்திய இணைப்பாளர் அ.மாதவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் புதிய வேட்பாளர்களாக இருக்கின்றவர்களுக்கும் இளைஞர்களுக்கும் எதிர்காலத்தின் நலனைக் கருத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும் . வாக்குகளை நாங்கள் கட்டாயமாக அளிக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றோம். தேர்தல் காலங்களில் எங்கள் வாக்குகள் மிகவும் முக்கியமானது இந்தத் தேர்தலில் மாற்றத்தை எதிர்நோக்கும் கருத்தோடு வாக்களித்தால் மிகச் சிறப்பாகவிருக்கும். அத்துடன் எமது நோக்கமானது ஓர் மாற்றத்தினை அதாவது நாட்டில் இருக்கக்கூடிய, சமூகத்தில் இருக்கக்கூடிய ஓர் மாற்றத்தை எதிர்நோக்கி வாக்காளர் வாக்களிக்கக் கூடியதாகவிருந்தால் சிறப்பானது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நீண்ட காலத்தை நாங்கள் வழங்கியிருக்கின்றோம். ஆனால் தீர்வுத்திட்டமானது சரியான முறையில் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் செயற்பட்டால் நிச்சயமாக ஒரு தீர்வுத்திட்டத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் - என்றார். (ப-110,18)




---

## கருணாவுக்கு அளிக்கும் வாக்குகள் துரோகத்தின் நன்றிக்கடனுக்குரியன

துரோகத் தனத்துக்கு நன்றிக் கடன் செலுத்தும் வாக்குகளே கருணாவுக்கு அளிக்கப்படும் வாக்குகள் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

ஆலையடிவேம்பு கண்ணகி புரம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுடனான சந்திப்பில் அவர் இந்தக் கருத்தை முன்வைத்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்காமல் விட்டால் எமது அடையாளங்கள் இல்லாமல் செய்யப்படும். எணவே எமது மக்கள் மிகவும் விழிப்பாக இருந்து எம்மையும் எமது மக்களையும் நேசிக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும். கிழக்கு மாகாணத்தில் ஒரு தமிழனாகப் பிறந்து விட்டேன் என வெட்கப்படுகின்றேன். ஏனென்றால் எங்களுடைய இனத்தை அழிவுப்பாதைக்கு இட்டு சென்றவர்கள் பொய்யான பிரசாரங்களைச் சொல்லி எமது மக்களை இருட்டறைக்குக் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். பெறுமதியான சர்வதேசமே வியந்து நின்ற பலமான அமைப்பு இந்த நாட்டிலே இருந்தது. அதனை அழித்து இல்லாமல் செய்து மார்தட்டுபவர் தான் விநாயகமூர்த்தி முரளிதரன். இவர் செய்த துரோகத் தனத்துக்கு நன்றிக் கடன் செலுத்தப் போகின்றார்களா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். எம்மை நடுத் தெருவில் நிறுத்தியது யார்? சம பலத்துடன் பேசக்கூடிய நிலையில் இருந்த எம்மை அழித்தது யார்?- எனவும் கேள்வியெழுப்பியுள்ளார். (ப)

---

## மற்றவர்களும் சாதிக்க மாட்டார்கள் என்று கூறுவது நகைப்புக்குரியதே

### கூட்டமைப்பை சாடினார் குணசீலன்

மன்னார், ஜூலை 9

மாற்றம் வேண்டும். மாற்றம் வந்தால் தான் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்கும் அல்லது நாங்கள் எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று கூறிய கூட்டமைப்பு ஒரு போதும் இந்த இருபது வருடங்களுக்குள் தங்களுக்குள் ஒரு சரியான மாற்றத்தைக் கொண்டு வந்தார்களா? என வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான ஞர்னசீலன் குணசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

சந்தர்ப்பமே கொடுக்கப்படாமல் சுமார் 20 வருடங்களாக எதையுமே சாதிக்க முடியாதவர்கள் மற்றவர்களும் சாதிக்க மாட்டார்கள் என்று கூறுவது ஒரு நகைப்புக்குரிய விடயம். கூட்டமைப்பு என்கின்ற காட்சியை பதிவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட எல்லா முயற்சிகளும் தமிழ் அரசுக் கட்சியினால் முறியடிக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பைப் பதியவேண்டும் என்று கூறி முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் எடுத்த முயற்சியின் கீழ் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்திருந்த நிலையில் அதனைக் குழப்பி, பதிய விடாமல் தடுத்த பங்கு தமிழ் அரசுக் கட்சியையும், தமிழீழ விடுதலை இயக்கத்தையுமே சாரும். அன்று தொடக்கமே அவர்களிடையே கூட்டமைப்பைப் பதிய வேண்டும், அதற்குப் பலத்தைச் சேர்க்க வேண்டும், எல்லாக் கட்சிகளுக்கும் சம அந்தஸ்தை வழங்க வேண்டும் என்ற தன்மையே அங்கு காணப்படவில்லை. அவர்கள் இன்று எதையும் சாதிக்காமல் மற்றவர்களிடம் வருபவர்கள் எதனைச் சாதிப்பார் என்று கேள்வி கேட்கிறார்கள். நாங்கள் இந்த முறை கேட்பது மாற்றம் ஒன்று வேண்டும். மக்கள் கட்டாயமாக இன்னொரு சந்தர்ப்பத்தை எங்களுக்கு வழங்க வேண்டும். எங்களுக்குச் சாதிக்கக்கூடிய வகைகளில் அதிகாரத்தைப் பெற்றுத் தர மக்கள் முன்வர வேண்டும் என்பதே எனத் தெரிவித்தார். (ப-213)

---

## கம்பெரலியவை முன்னிறுத்தி வாக்குக் கேட்கும் அவலம்!

### கூட்டமைப்பைச் சாடும் சுரேஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 9

அரசமைப்புக்கு கூட்டமைப்பு மக்கள் ஆணை வழங்கினார்கள். ஆனால் அவர்களோ கம்பெரலியத் திட்டத்தை முன்னிறுத்தி வாக்குக் கேட்கின்றார்கள். இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவரும் வேட்பாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரின் பின்னர் நாங்கள் ஐக்கியப்பட்டு இயங்குவதனூடாகவே இலங்கை அரசிடமிருந்து எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற அடிப்படையில் நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக 16 பேரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தீர்கள். அவர்கள் தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்தவில்லை. மக்களின் ஆணையை மறந்து விட்டார்கள்.

தமிழ் மக்களுடைய நலன்கள் இரண்டாம் பட்சம் என்று யோசிக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் நான்கரை வருட நாடாளுமன்றக் காலத்தில் ஒரே ஒரு நாள் மட்டுமே உரையாற்றியுள்ளார். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான முரண்பாடுகள் அல்லது இலங்கை அரசுடைய சர்வதேச கொள்கைகள், அவை எவ்வளவு தூரம் ஏனைய நாடுகளைப் பாதிக்கின்றது என்ற விடயங்கள் போன்றவற்றை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச விடயங்களைக் கையாளக்கூடியவர்களும் அதில் புலமையும் அனுபவமும் இருக்கக்கூடியவர்களும் தான் நாடாளுமன்றம் போக வேண்டும்.

எங்களுடைய கூட்டணி தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய, பொதுக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய, அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, அனைவரையும் உள்ளடக்கக்கூடிய கூட்டணியாக இது இருக்க வேண்டும். இயன்றவரை இவ்வாறான ஒரு கூட்டணியை உருவாக்கி இருக்கின்றோம் - என்றார். (ஒ.5)

# அனுபவம் வாய்ந்த தலைமைத்துவம் எமது கட்சிக்கே உரியது

## பிரதமர் பெருமிதம்

கொழும்பு, ஜூலை 9
சில அரசியல் தலைவர்கள் அரசியல் கட்சிகளையும், வாக்காளர்களையும் விட்டுச்செல்லும் சந்தர்ப்பத்தில், நிலையான மற்றும் அனுபவம் வாய்ந்த அரசியல் தலைமைத்துவமொன்று தமது கட்சிக்கே இருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



லுணுகம்வெஹெர பிரதேச சபை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவடைந்து தலைமைத்துவமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன், இலங்கை முழுவதுமுள்ள ஐ.தே.க. உறுப்பினர்கள் மாத்திரமன்றி தேர்தல் வேட்பாளர்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. கலாசார நிதியத்தின் பணம், பாலம் நிர்மாணித்தல் உள்ளிட்ட வேறு செயற்பாடுகளுக்கு பெரியளவில் செலவிடப்பட்டுள்ளதால், சிறு விகாரை அபிவிருத்தி மற்றும் புராதன இடங்கள் அபிவிருத்திக்கென உருவாக்கப்பட்ட அந்த நிதியத்தின் நோக்கம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது. சில விகாரைகளுக்கு பல இலட்சம் ரூபாய்களை தன்னிச்சையாக வழங்கியிருப்பதுடன், மேலும் பணம் வழங்குவதற்கும் உறுதி வழங்கியுள்ளனர்.

வீடமைப்புத் திட்டம் என்ற போர்வையில் யானை நடமாட்டமுள்ள இடங்களில் சிறு வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்து அந்த வீட்டு உரிமையாளர்களை கடனாளிகளாக்கி உள்ளதாக தெரிவித்த பிரதமர், இவ்வாறான முறையான திட்டமிடல் அற்ற தலைமைத்துவத்தை மக்கள் இருமுறை சிந்திக்காது நிராகரிப்பர்.

இதேவேளை, தமது அரசாங்கங்களின்கீழ்கணக்குப்பார்த்து வீடுகளை நிர்மாணிக்காவிடினும், பெரிய வீடமைப்புத் திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டமையை நினைவு கூர்ந்த பிரதமர், கடந்த அரசாங்கத்தின்போது பத்து வீடுகள் மாத்திரம் நிர்மாணிக் கப்படினும் அவ்வீடுகளை நிர்மாணிக்க செலவிடப்பட்ட பணத்தைவிட அதிக தொகை திறப்பு விழாவுக்கான விளம்பர சுவரொட்டிகளுக்காக செலவிடப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார். (ரி3)

## பெண் தலைமை குடும்பங்களுக்கு ஒஸ்ரியா நிறுவனம் நிதியுதவி!

வவுனியா, ஜூலை 9
வவுனியாவில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட 20 குடும்பங்களுக்கு ஒஸ்ரியா போட்டோ நிறுவனத்தால் நேற்று முன்தினம் நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

ஒஸ்ரியா நிறுவனத்தின் உரிமையாளர் எஸ்.சிவஜீவனின் பணிப்புரைக்கமைவாக கொரோனாப் பெருந்தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கடந்த மே மாதம் இனங்காணப்பட்டு வவுனியா புகைப்படச் சங்கத்தினூடாக நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் கோவில்குளம், வேப்பங்குளம், மகாறம்பைக்குளம் மற்றும் திருநாவற்குளம் போன்ற கிராமங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட விசேட தேவைக்குட்பட்டோர் மற்றும் பெண் தலைமைத்துவத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் ஒரு இலட்சம் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது. (ரி1-110)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி நாளை 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.மாவட்டத்தில்** பலாலி சந்தி பிரதேசம், வசாவிளான் ஒரு பகுதி, பலாலி விமான நிலைய பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா மாவட்டத்தில்** கிறிஸ்தவகுளம், புளியங்குளம், வாரிக்குட்டியூர், சங்கரபுரம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் மாவட்டத்தில்** சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் பல்மரா ஹவுஸ், கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, பல்மரா ஹவுஸ் கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, நியூ சில்க் றோட், தோட்டவெளி, ரைமிக்ஸ் ஆடைத்தொழிற்சாலை, இன்டர்சியல் எஸ்ரேட், மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச்சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம்,

இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## முறைசாராப் பயிற்சிநெறிகள் ஆரம்பம்

தென்மராட்சி, ஜூலை 9
தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்தவர்களுக்கான மின்னிணைப்பு மற்றும் மணப்பெண் அலங்காரம், கேக் ஐசிங் போன்ற பயிற்சிநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மின்னிணைப்பு பயிற்சிகள் நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையிலும், மணப்பெண் அலங்காரம் மற்றும் கேக் ஐசிங் பயிற்சிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

பயிற்சிகளில் இணையவுள்ளவர்கள் மின்னிணைப்பு பயிற்சிக்கான பதிவுகளை தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவிலும், மணப்பெண். அலங்காரம் மற்றும் கேக் ஐசிங் பயிற்சிக்கான பதிவுகளை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-9)

## இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் நல்ல செயலை சிலர் கேலி பேசுவர். நம்பிக்கையுடன் செயல்படுவது அவசியமாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய யுக்தியை கையாள்வீர்கள். சீரான அளவில் பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** எதிரான சூழ்நிலை நிலவினாலும் மனசாட்சியுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில்வருகிற குளறுபடியை மாற்று உபாயத்தால் சரிசெய்வது நல்லது.

**மிதுனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணிகளில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திட்டமிட்ட இலக்கை எட்டும்.

**கடகம்:** பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம். விஷப்பிராணிகளிடம் இருந்து விலகுவது நல்லது.

**சிம்மம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். முயற்சிகளுக்கான பலன் திருப்திகரமாக கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்கும். சமூகத்தில் தனி அந்தஸ்தை பெறுவீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கன்னி:** சொந்த விஷயங்களை பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தெய்வ அனுகூலத்தால் நினைத்த செயல் அனைத்தும் நிறைவேறும். சிக்கனமாகச் செலவு செய்வீர்கள்.

**துலாம்:** சிலருக்கு சரியான நேரத்தில் உதவிசெய்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றத்தை செய்வது நல்லது. பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** செயல்கள் அனைத்திலும் நேர்த்தி காணப்படும். குடும்பத்தினரால் பாராட்டும் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் முன்னேற்றகரமான பலன் உண்டு.

**தனுசு:** வெளிவட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். எந்தச் செயலிலும் பொறுமை அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் பயனளிக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** மாற்று கருத்து உடையவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க கிடைக்கும் வாய்ப்பை சரியாக பயன்படுத்துவீர்கள். சிக்கனம் சிரமத்தை தவிர்க்க உதவும்.

**கும்பம்:** செயல்களில் இரக்க குணம் வெளிப்படும். பிறருக்கு உதவுவதை விருப்பமாக கொள்வீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும்.



## வறுமை ஒழிப்புத்திட்ட மீளாய்வுக் கூட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2019, 2020 ஆண்டுகளில் நடைமுறைபடுத்தப்படும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வறுமை ஒழிப்புத்திட்டம் தொடர்பான திட்ட மீளாய்வுக் கூட்டம் மாவட்ட அரச அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

அரசாங்கத்தின் அங்கீகாரத்தில் சுமார் 144 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் வறுமைக் கோட்டின் கீழ் மக்கள் வாழும் ஐந்து மாவட்டங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் நடைமுறைபடுத்தப்படும் இத்திட்டங்கள் தொடர்பான மீளாய்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இலங்கை அரசாங்கம் கொரிய நாட்டு அரசாங்கத்திற்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கமைய உலக உணவுத் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. (ரி1 -150)

## போதைப்பொருள் மோசடி; மேலும் ஓர் அதிகாரி கைது

கொழும்பு, ஜூலை 9

போதைப்பொருள் மோசடி செய்பவர்களுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டில் பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தில் இணைக்கப்பட்ட மேலும் ஓர் அதிகாரியை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

குறித்த நபர் நேற்று முன்தினம் ராகம பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பொலிஸ் அத்தியேட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். போதைப்பொருள் மோசடிகளுக்கு உதவுவதன் மூலம், மில்லியன் கணக்கான வருமானம் ஈட்டிய குற்றச்சாட்டில் பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தில் இணைக்கப்பட்ட அதிகாரிகள் குழு மீது சி.ஐ.டி.யினர் தற்போது சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# முல்லைத்தீவில் புதிய பல்கலை!

### ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பம்

**கொழும்பு, ஜூலை 9**

**ஐந்து மாவட்டங்களில் புதிய பல்கலைக்கழகங்களை நிர்மாணிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

களுத்துறை, நுவரெலியா, மாத்தளை, ஹம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன என ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் ஜனிதா லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக பேராசிரியர்கள் ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட் டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழகங்களை நிர்மாணிப்ப தற்கான காணிகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இவ் வருடத்தின் இறுதிப் பகுதியில் பல்கலைக்கழக கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)

## பேருந்தில் பயணித்த பெண் மீது தாக்குதல்!

அம்பலாங்கொடை, ஜூலை 9

பேருந்தில் வைத்து பெண்ணொருவர் தாக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று அம்பலாங்கொடைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக அம்பலாங்கொடைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


அம்பலாங்கொடைப் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து அளுத்கம நோக்கி பயணிக்க தயாராக இருந்த பேருந்தில் வைத்தே குறித்த பெண் தாக்கப்பட்டுள்ளார். அந்தப் பெண்ணைத் தாக்கினார் எனக் கூறப்படும் பிக்கு ஒருவர் கைது செயப்பட்டுள் ளார்.

கொபல்லவ விஜித (வயது 72) என்ற பிக்குவே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பலபிட்டிய வெள்ளவத்தைப் பிரதேசத்தைப் சேர்ந்த 37 வயதான பெண் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண் வழங்கிய முறைப்பாட்டுக்கமையவே பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார். (ரி2)

## சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் விசேட கூட்டம்

திருகோணமலை, ஜூலை 9

திருகோணமலை மாவட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம், மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. திருகோணமலை மாவட்டம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த பல இடங்களைக் கொண்டதாக காணப்படுகின்றது.



இத்துறை மூலம் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு உட்பட பல்வேறு பயன்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக காணப்படுகின்றது. எனவே இங்குள்ள வளங்களை கொண்டு இத் துறையை மேம்படுத்துவது இன்றியமையாதது. அடையாளம் காணப்பட்ட சுற்றுலா வுடன் தொடர்புடைய துறைகளை, முறையான திட்டங்களை கையாண்டு செயற்படுத்துவதன் மூலம் உரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்துள்ளார். 2020/2023 காலப்பகுதிக்குரிய திருகோணமலை மாவட்டத்தித்துக்கான புதிய சுற்றுலாத்துறை திறன்கள் தந்திரோபாயம் மற்றும் செயல்திட்டமானது நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டபோதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி திட்டம் தொடர்பான கையேட்டின் முதல் பிரதி, மாவட்ட அரச அதிபருக்கு உள்வாங்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் திருகோணமலை மாவட்ட முகாமையாளர் எம்.மதியழகனால் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது. (ரி2-40)

## சட்டவிரோத மணல் அகழ்வு இருவர் கைது

வாழைச்சேனை, ஜூலை 9

வாழைச்சேனையில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடு பட்ட இரண்டு சந்தேகநபர்களும், இரண்டு உழவு இயந்திரங்களுடன் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டனர் என வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

வாகனேரி ஒதுக்குக்காடு முள்ளிவட்டவான் பகுதியில் வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினர் மற்றும் வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போதே மணல் அகழ்வில் ஈடுபட்ட நிலையில் இரண்டு சந்தேகநபர்களும், இரண்டு உழவு இயந்திரங்களுடன் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார். (ரி1-150)



# பி.சி.ஆர். பரிசோதனையில் சிக்கல்


### ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஜூலை 9

சுகாதார அமைச்சினால் விடுக்கப் படுகின்ற மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள் தொடர்பில் எதிர்காலத்தில் சிக்கல் நிலை ஏற்படுவதற்கான சாத்தியமுள்ளதாக அரச மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களின் சங்கம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலை வர் ரவி குமுதேஷின் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்குக் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று தொடர்பில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளும் சுகாதார



அமைச்சின் எந்தவொரு ஆய்வுகூடமும் அவற்றின் அதிகபட்ச பரிசோதனை எல்லையை அண்மிக்கவில்லை. தனியார் ஆய்வுக்கூடங்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மாதிரிகள் அனுப்பி வைக்கப்படுகின்றமை தேவையற்ற சிக்கல் நிலையைத் தோற்றுவிக்கக் காரணமாக அமையும் என அதில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

அண்மையில் ஜிந்துப்பிட்டியில் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, வழங்கப்பட்ட அறிக்கை சுகாதார அமைச்சின் கீழுள்ள ஆய்வுக்கூடமொன்றினால் வழங்கப்படவில்லை என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் கீழுள்ள ஆய்வுகூடங்கள் தொடர்பில் விசாரணையும் கணக்கெடுப்பும் நடத்துமாறு அரச மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்களின் சங்கம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ரி1)

# வடக்கின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தக்கதருணம் இது

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 9

**வடக்கு மாகாண மக்களின் அபிவிருத்திக்கான திட்டங்களை முன்னெடுப்பதற்குரிய தகுணம் இது என்று வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணத்திலுள்ள மாடுகள் வளர்ப்பு, மேய்ச்சல் நிலப்பற்றாக் குறை, மாடுகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஆளுநர் தலைமையில் ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர்கள், மாகாணக் காணி ஆணையாளர், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள அதிகாரிகள் மற்றும் விவசாய அமைச்சின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேய்ச்சல் நிலங்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளை அதிகாரிகளிடம் கேட்டறிந்த பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வனத்துறை மற்றும் வன விலங்குத் துறைகளோடு இணைந்து மேய்ச்சல் நிலப்பரப்பை விருத்திசெய்ய சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகள் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மாட்டுச்சந்தைகளை உருவாக்குவதன் மூலம் இடைத்தரகர்களையும், மோசடிகளையும் தவிர்த்து மாடுகளை வளர்ப்பவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும்.

வீதிகளிலும் தெருக்களிலும் மாடுகளை வளர்ப்பதைத் தவிர்த்து தேவையான மேய்ச்சல் நிலங்களை உருவாக்கி கால்நடை வளர்ப்பை விரிவாக்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் பாற்பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதோடு அதற்கான சந்தைப்படுத்துதலையும் விரிவுபடுத்தி மாகாண வளர்ச்சிக்கு ஒத்துழைப்புக்களை முன்னெடுப்பதற்குரிய செயற்பாடுகளை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும்.

மேலும் இத்துறை சார்ந்த முதலீட்டாளர்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். மத்திய அரசும் பிரதமரும் வட மாகாண வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமையும் ஒத்துழைப்பையும் தருவோம் எனக் கூறியுள்ளனர்.

ஆகவே, எமது மாகாண மக்களின் முன்னேற்றத்துக்கான திட்டங்களையும் வேலைகளையும் நாம் முன்னெடுக்க வேண்டிய தருணம் இதுவாகும் - என்றார். (ஐ)



# மாணவர்களுக்கு முகக் கவசங்கள்

வவுனியா, ஜூலை 9

வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலயம் மற்றும் வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களுக்கு முகக் கவசங்கள் வழங்கப்பட்டன.

லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் நிதி உதவியுடன் வெளிச்சம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்த முகக் கவசங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (ஐ)

# தேர்தல் கடமைகள் தொடர்பில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூலை 9

தேர்தல் கடமைகளுக்கு கிராம அலுவலர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல் தொடர்பிலான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின்போது தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்களை தயார்ப்படுத்தல், வாக்காளருக்கும் வாக்கெடுப்பு நிலைய பணியாளர்களுக்கும் ஏற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய பணிகளில் கிராம அலுவலர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும், தேர்தல் நடவடிக்கையை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்களை பின்பற்றுவதற்குமான ஏற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் வாக்கெடுப்பு நிலையத்துக்கான பொதுவசதிகளை ஏற்படுத்துதல், தளபாட வசதிகளை ஏற்படுத்துதல்,மின்சாரவசதிகளை வழங்குதல்,மின்சார இணைப்புள்ள நிலையத்தில் ஓர் அவசர விளக்கை எரியவைப்பதற்கும், மின்சார வசதியற்ற நிலையத்தில் இரண்டு அவசர விளக்கை எரியவைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வாக்கெடுப்பு நிலைய வளாகத்தில் வரிசை வேலிகளை அமைத்தல்,வாக்கெடுப்பு நிலையத்துக்கான நீர் விநியோகம் தொடர்பாகவும் தேர்தல் பணியாள்களின் வருகையும், அவர்களின் தேவைகளை அறிந்துகொள்வது தொடர்பிலும் ,தேர்தல் பணியாள்களின் நலன்புரி விடயங்கள் தொடர்பில் தங்குமிட வசதிகளை வழங்குதல்,உணவு விநியோகம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (ஐ-222)

# உடையார்கட்டு குளத்தின் கீழ் 300 ஏக்கரில் இடைப்போகம்

முல்லைத்தீவு, ஜூலை 9

முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார் கட்டு குளத்தின் கீழ் 300 ஏக்கரில் இடைப்போகம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டு குளத்தின் கீழ் இதுவரை இரண்டு போகங்கள் நெற்செய்கை பண்ணப்பட்டு வந்தது.

கடந்த ஆண்டு பதிவான மழை வீழ்ச்சியில் குளத்தில் போதிய ளவு நீர் தேங்கிக் காணப்பட்டதால் இந்த ஆண்டின் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டு அறுவடை செய்த விவசாயிகள் இடைப்போக நெற்செய்கையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர் என உடையார் கட்டுவடக்கு கமக்கார அமைப்பின் தலைவர் க.குணபாலா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

குளத்தின் நீரைச் சேமித்து வைத்துள்ளதால் தற்போது 13.5 அடி நீர் மட்டம் காணப்படுகின்றது. இந்நிலையில் குறுகிய கால நெல்லை விதைக்க விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வறட்சியான காலத்தில் இடைப்போகத்தை மேற்கொள்வற்காக மானிய உரத்தை பெற்றுத்தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை கால்நடையைக் கட்டுப்படுத்துவதற்காக வேலி அடைத்து நெற்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டு வடக்கு, சுதந்திரபுரத்தின் ஒருபகுதி,இருட்டுமடுவின் ஒருபகுதி என 300 ஏக்கர் நீர் பாயக்கூடிய வயல் காணிகளைத் தெரிவு செய்து நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வி.ஜி.300 எனப்படும் மூன்று மாத நெல்லை விவசாயிகள் செய்கை பண்ணவுள்ளனர் - என்றார். (ஐ-19)



# பெரியளவிலான கசிப்பு உற்பத்தி பொலிஸாரால் முறியடிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 9

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட விசுவமடு,நெத்தலியாறு பகுதிகளில் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன.

குறித்த பகுதிகளில் சமூக சீர்கேடுகள் நடைபெறுகின்றன என பொதுமக்களால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலை ஐ.பி.அமரசிங்க தலைமையிலான குழுவினர் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

குறித்த பகுதியில் பெரியளவிலான கசிப்பு உற்பத்தி இடம்பெற்றுவந்தமை தெரியவந்துள்ளது. உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரைக் கண்டதும் தப்பி ஓடி விட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது 50 லீற்றர் கசிப்பு, 5 பரல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-19)

# குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணம் நாவலர் வீதி நல்லூர் ஈழத்து சீரடி சாயி மந்திர் ஆலய குடமுழுக்கு இன்று வியாழக்கிழமை காலை 7.20 மணி தொடக்கம் 8.58 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

குடமுழுக்கு கிரியைகளை பிரதமகுரு பிரம்மஸ்ரீ வா ஜெயவஸ்தாங்க குருக்கள் நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தென்மராட்சியில் நடமாடும் சேவை

தென்மராட்சி, ஜூலை 9

தென்மராட்சி பிரதேசத்தில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் ஆகிய பதிவுகளை மேற்கொள்ளாதவர்களுக்கும், தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கும் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவை விரைவில் நடைபெறவுள்ளது.

இதன் முதற்கட்டமாக அவ்வாறான தேவையுடையவர்களிடம் ஆவணங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

அதைத் தொடர்ந்து மறவன்புலவு, தனங்களப்பு, கோயிற்குடியிருப்பு , அல்லாரை, கச்சாய், பாலாவி ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் நடமாடும்சேவைகள் நடைபெறவுள்ளன.

இது தொடர்பில் உரிய பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ)



நயினாதீவு ஸ்ரீ கணேசாவுக்கு

## கொரோனா பாதுகாப்பு கருவிகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம், நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ர மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள், மற்றும் ஆசிரியர்களை கொரோனா வைரஸில் இருந்து பாதுகாக்கும் வகையில், பாதுகாப்புக் கருவிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

நயினாதீவு சிவகாமி அறக்கட்டளை நிலைய நிறுவுநர் மகாதேவாவினால் கடந்த திங்கட்கிழமை இந்தக் கருவிகள் கையளிக்கப்பட்டன. முகக்கவசம் மற்றும் கையுறை என்பன வழங்கப்பட்டதோடு, பாடசாலைக்கென உடல் வெப்பநிலையைப் பரிசோதிக்கும் கருவிகள், கைகழுவும் திரவம், பாடசாலையைத் தொற்று நீக்கம் செய்யும் திரவம் மற்றும் கருவி அத்தோடு வெற்றுக் கொள்கலன்கள் (கைகழுவும் திரவம் பாவிப்பதற்கு) என்பனவே இவ்வாறு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நயினாதீவுப் பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி க.நவரட்ணராஜா மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர். மேலும் சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகள் தொடர்பாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியால் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. மாணவர்களின் பாதுகாப்புக்கும், சுகாதார ஆரோக்கியத்துக்கும் மேற்படி பொருள்களை வழங்கிய அன்னை சிவகாமி அறக்கட்டளை நிறுவநருக்கு பாடசாலைச் சமூகத்தினர் நன்றி தெரிவித்தனர். (ப)

# இறங்குதுறை சீரில்லாததால் படகுகளை பாதுகாப்பதில் சிரமம்

## நெடுந்தீவு கிழக்கு மீனவர் கவலை

**யாழ்ப்பாணம், ஜூலை 9**
**நெடுந்தீவு கிழக்கு கரையோரப்பகுதியில் சரியான இறங்குதுறைகள் இன்மையால் கடற்றொழில் உபகரணங்களைக் கரைசேர்ப்பதிலும் படகுகளைப் பாதுகாப்பதிலும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

நெடுந்தீவு கிழக்கில் பிடாரி அம்மன் கோவில் முதல் காளவாய் முனை வரையான கரையோரப் பகுதிகளில் கடற்றொழில்களில் ஈடுபட்டு வருவோர் இறங்குதுறைகள் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

குறித்த கரையோரப் பகுதிகளில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் கரையோரப் பகுதிகளில் உரிய இறங்குதுறைகள் இல்லாத நிலை காணப்படுவதுடன் கரையோரப்பகுதிகளில் முருகைக் கற்பாறைகளும் காணப்படுகின்றன.

இதனால் தினமும் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் தமது கடற்றொழில் படகுகளை கரையிலிருந்து கடலுக்குக் கொண்டு செல்வதிலும் கரைசேர்ப்பதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் கடும் காற்றுக் காலங்களில் படகுகளைப் பாதுகாக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர். (ப)



## மரக்கன்றுகள் வழங்கல்

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் மரம் நடுகை மற்றும் பசுமையான சூழலை ஏற்படுத்தும் நோக்கிலும் மூளாயில் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

சமூக சேவைகளை ஆற்றிவரும் யாழ்ப்பாணம் பெனின்சுலா றோட்டறிக் கழகம் நேற்று முன்தினம் இந்த மரக்கன்றுகளை வழங்கியது. இந்த நிகழ்வில் மூளாய் கிராம அலுவலர், மற்றும் பெனின்சுலா றோட்டறிக் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ப)



## இளைஞர்கள் இருவர் இராணுவத்தால் கைது

***வாள்களுடன் சென்றனர் எனக் குற்றச்சாட்டு***

கொடிகாமம், ஜூலை 9
வாள்களுடன் சென்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு இளைஞர்கள் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை கொடிகாமம் இராமாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இராமாவில் பகுதியில் உள்ள கள்ளுத்தவறணைக்கு கள் அருந்துவதற்காக வந்தபோது ஏற்பட்ட வாய்த் தர்க்கம் காரணமாக ஐந்து பேர் கொண்ட குழு சண்டை செய்வதற்காக கொடிகாமத்தில் இருந்து வாள்களுடன் வந்தது என்றும், அவர்களை இராணுவத்தினர் சோதனை செய்த போதே வாள்களுடன் இருவர் பிடிக்கப்பட்டனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. அந்தக் குழுவில் வந்த மூவர் தப்பியோடி விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட இரண்டு இளைஞர்களும், நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர். (ப-159)

# வீதி விபத்துக்களை அனுமதிக்க முடியாது

## வடக்கு ஆளுநர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம்பெறுகின்றமையை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்த ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ், பாதுகாப்பான போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காகப் பொலிஸாருடன் இணைந்து அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

வட மாகாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் வீதி விபத்துக்கள் மற்றும் சட்ட ஒழுங்குகளின் நிலைமைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று வடக்கு மாகாண ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று வட மாகாண ஆளுநர் திருமதி.பீ.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தின் பொலிஸ் உயர் அதிகாரிகள், வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள், வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினர் மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். வடமாகாணத்தில் அண்மைய தினங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்திய ஆளுநர், தொடர்ச்சியாக விபத்துச் சம்பவங்கள் நடைபெறுவதற்கான காரணங்கள் தொடர்பிலான விளக்கங்களைக் கோரியிருந்தார். இதன்போது இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றமையை அனுமதிக்க முடியாது என்பதையும் திட்டவட்டமாக அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சாலை விபத்துக்களைத் தவிர்த்து அதனூடாக ஏற்படும் உயிர் இழப்புக்களைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுத்த வேண்டும். உரிய தகவல்கள் கொண்ட வீதி அறிவித்தல் பலகைகள் வைக்கப்பட வேண்டும். கால்நடைகள் வீதிகளில் நடமாடுவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வீதிச் சீரமைப்பை இரவு நேரங்களில் செயற்படுத்துவதன் மூலம் போக்குவரத்து நெருக்கடிகளையும், விபத்துக்களையும் தடுக்க முடியும். போதுமான அளவுக்கு வாகனத் தரிப்பிடங்களை ஏற்படுத்த வேண்டும். முக்கியமான இடங்களில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட வேண்டும், வீதிகளின் இரு பக்கங்களையும் சுத்தப்படுத்தி பராமரிக்க வேண்டும். கனரக வாகனங்கள் நகருக்குள் உட்பிரவேசிப்பதன் நேரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். வீதியோரங்களிலுள்ள மரக்கிளைகளை இனங்கண்டு அவற்றை அகற்ற வேண்டும். தொடர் விபத்து க்களை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. இந்த விடயத்தில் அதிகாரிகள் விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ப)

## விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

நெடுந்தீவு, ஜூலை 9
மகளிர் மற்றும் சிறுவர் விவகார உலர்வலய அபிவிருத்தி அமைச்சின் கீழ் பெற்றோரை அறிவுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நேற்று நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
மாவட்ட முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.அமலனால் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்தில், நெடுந்தீவு பிரதேச முன்பிள்ளைப்பருவ சிறார்களின் பெற்றோர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (ப)

## சுகாதார வசதிகளுடன் கல்வி நிறுவனங்கள் இயங்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 9
தனியார் கல்வி நிலையங்கள் கற்றலுக்கான சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு இயங்க வேண்டும் என்று வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.
கொவிட் 19 வைரஸ் எச்சரிக்கைக்குப் பின்னர் வலிகாமம் கிழக்கில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களை வழிப்படுத்துவதற்கான கூட்டம் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
'எமது கல்வியில் தனியார் கல்வி நிறுவனங்களின் வகிபாகம் தவிர்க்கமுடியாத ஓர் அங்கமாகக் காணப்படுகின்றது.
இன்றைய காலகட்டத்தில். மாணவர்கள் அதிகமாக ஒன்றுகூடும் மற்றும் நேரத்தை ஒதுக்கும் இடங்களாக தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ள நிலையில் அந்த தனியார் கல்வி நிறுவனங்கள் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட மாணவர்களின் உடல் உள ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் அடிப்படைகளைக் கொண்டியங்குவது அவசியமானதாகும்.
மாணவர்களுக்கான சுகாதார உட்கட்டமைப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பில் வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தல்களைத் தவறாது கல்வி நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும்-என்றார். (ஐ)

# வடக்கில் ஏழே நாள்களில் மூவருக்கு எலிக்காய்ச்சல்

**யாழ்ப்பாணம், ஜூலை 9**
**வடக்கு மாகாணத்தில் கடந்த ஏழு நாள்களில் எலிக்காய்ச்சலால் மூவர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**



சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினரால் வாராந்தம் வெளியிடப்படும் புள்ளி விவரம் நேற்று வெளியிடப்பட்டது. அதிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம், மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே இவ்வாறு எலிக்காய்ச்சல் இனங்காணப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஒருவரும், முல்லைத்தீவில் இருவருமாக மூவர் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு இதுவரை 92 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவி னர் தெரிவித்துள்ளனர். எலியின் சிறுநீர் உணவுகளில் அல்லது நீர்தேங்கி நிற்கும் இடங்களில் கலப்பதன் மூலம் எலிக்காய்ச்சல் ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்று மருத்துவர்கள் அறிவித்துள்ளனர். (ப)

## பெரு நிலப்பரப்பில் குறைந்தது டெங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடக்கு மாகாணத்தின் வன்னிப் பெருநிலப்பரப்பை உள்ளடக்கிய கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் டெங்கு நோயின் தாக்கம் மிகக் குறைந்துள்ளது என்று தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.
இலங்கையில் உள்ள மாகாணங்களில் வடக்கு மாகாணத்தில் கடந்த மாதம் டெங்குவின் தாக்கம் குறைந்துள்ளது என்றும் அந்தப் புள்ளிவிவரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பல பகுதிகளில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்திருந்தது. இதன் தாக்கத்துக்கு உள்ளான மக்கள் மருத்துவமனை களை நாடினர். சுகாதார மருத்துவ அதிகாரிகள் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அனைத்து மருத்துவமனைகளுக்கும் அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. டெங்கு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டன. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வீடு வீடாகச் சென்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். மக்களுக்கு அறிவுறுத்தினர். மீறுபவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்தனர். எனினும் கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக நோயின் தாக்கம் வடக்கில் குறைவடைந்துள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அந்த வகையில் கடந்த ஜூன் மாதம் கிளிநொச்சியில் ஒருவரும், மன்னாரில் ஒருவரும், முல்லைத்தீவில் ஒருவரும், வவுனியாவில் நால்வரும் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். (ப)

# கடைசி நோயாளியுள்ளவரையும் மருத்துவர்கள் கடமையிலிருப்பர்

*சாவ. மருத்துவமனை அத்தியட்சகர் தெரிவிப்பு*

சாவகச்சேரி, ஜூலை 9
சாவகச்சேரி மருத்துவமனையில் கிளினிக்குகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி, கடைசி நோயாளியைப் பார்வையிடும் வரை மருத்துவ நிபுணர் உட்பட ஐந்து மருத்துவர்கள் கடமையில் இருப்பார்கள் என்பதால் நோயாளர்கள் அதிகாலை வேளையே மருத்துவமனைக்கு வருகை தரவேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் திருமதி டயாழினி மகேந்திரன் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும்தெரிவித்ததாவது;
கொரோனாத் தொற்றுக் காலத்தில் கிளினிக் நோயாளர்களுக்கு இரு மாதங்களுக்கான மருந்துகள் தபாலில் அனுப்பப்பட்டன. கொரோனாவின் தாக்கம் சற்றுக் குறைவடைந்ததால் நோயாளர்களை மருத்துவர்கள் பார்வையிடுவதற்கு வசதியாக நோயாளர்களுக்கு நேரங்கள் ஒதுக்கப்பட்டு அவர்களின் கிளினிக் கொப்பிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த நேரப் பிரகாரம் மருத்துவர்களின், பார்வைக்கு வந்து பரிசோதனைகளை மேற்கொள்ளலாம். மீள் மருந்து பெற (றிப்பீற்) குறிப்பிடப்பட்டவர்கள் முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் வருகை தர வேண்டும். கொரோனா தொற்றுக்கு முன்னர் பார்வைக்கு திகதி குறிப்பிட்ட நோயாளர்களுக்கு காலை 8.00 மணிக்கும், மீள்மருந்து பெறுவோருக்கு பகல் 1.00 மணிக்கும் மருந்துகள் வழங்கப்பட்டன. தற்போதைய நிலைமை யைக் கருத்தில்கொண்டு அனைத்து கிளினிக் நோயாளர்களும் டச்சு வீதியில் உள்ள வாசல் ஊடாக வருகை தரவேண்டும். அங்கு பரிசோதனைகள் மேற்கொண்ட பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர். இதனால் முன்வாசல் வழியாக கிளினிக் மண்டபத்துக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
கிளினிக்குகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாவதால் காலை 7.00 மணிக்கு டச்சு வீதி வாசல் திறக்கப்பட்டு அங்கு வருவோர் தகுதிவாய்ந்த அதிகாரியால் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர். இதனால் கிளினிக்குகளுக்கு வரும் அனைத்து நோயாளர்களும் காலை 7.00 மணிக்குப் பின்னர் காலை உணவருந்தி காலை மருந்துகளை உட்கொண்ட பின்னர் வருகை தாருங்கள் - என்றார். (ப-9)


## இயங்கத் தொடங்கின பகல் பராமரிப்பு நிலையங்கள்

தென்மராட்சி, ஜூலை 9
தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனாத் தொற்றுக் காரணமாக நிறுத்தப்பட்ட பகல் பராமரிப்பு நிலையங்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் இயங்கி வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி ,கைதடி ஆகிய இடங்களில் உள்ள பாலர் பகல் பராமரிப்பு நிலையங்களே இயங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.
வேலைக்குச் செல்லும் பெற்றோர்களின் நலன் கருதி உரியசுகாதார விதிமுறைகளை அனுசரித்து பராமரிப்பு நிலையங்களை மீண்டும் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான அமைச்சினால் அறிவிக்கப்பட்டது.
இதனையடுத்து அந்தந்த கல்வி வலயங்களின் ஏற்பாட்டில் பராமரிப்பு நிலையங்கள் இயங்க ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# ஓட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி

ஒட்டுசுட்டான் செங்கல் மற்றும் ஓட்டுத் தொழிற்சாலையின் தயாரிப்பு நடவடிக்கைகளைத் தனியார் நிறுவனத்தின் ஒத்துழைப்பின்றி மீள ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
தனிப்பட்ட முதலீட்டாளர்களின் ஒத்துழைப்பின்றி இந்தத் தொழிற்சாலையின் தயாரிப்பு நடவடிக்கைகளை லங்கா பீங்கான் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்வதற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2020.07.01 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
வரையறுக்கப்பட்ட சம்சன் ரஜரட்ட டைல்ஸ் (தனியார்) நிறுவனத்துடன் இணைந்து இலங்கை மட்பாண்ட (பீங்கான்), கூட்டுத்தாபனத்தின் கீழ் நடத்தப்படும் ஒட்டுசுட்டான் செங்கல் மற்றும் ஓட்டுத் தொழிற்சாலையின் தயாரிப்பு நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அங்கீகாரம் வழங்கப்பட்டது. இருப்பினும் தற்போது இலங்கை மட்பாண்ட (பீங்கான்) கூட்டுத்தாபனத்தால் இந்த தொழிற்சாலையை மீள ஆரம்பிக்கும் நோக்கில் மறுசீர மைப்பு செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தனியார் நிறுவனத்தின் ஒத்துழைப்பின்றி த[illegible]பா ரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பத[illegible]த் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைவா[illegible]த் தனிப்பட்ட முதலீட்டாளர்க ளின் ஒத்து[illegible]ப் பின்றி இந்தத் தொழிற்சாலைத் தயா[illegible]பு நடவடிக்கைகள் லங்கா பீங்கான் கூட்டு[illegible]ா பனத்தினாலேயே மேற்கொள்வத[illegible]ா கக் கைத்தொழில் மற்றும் விநியோக [illegible]ா மைத்துவம் மற்றும் சிறிய மற்றும் நடு[illegible]ர அளவிலான வர்த்தகம் மற்றும் தொ[illegible]ற் துறை அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்[illegible]த பரிந்துரைக்கு அமைச்சரவையினால் [illegible]ங் கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ப-22[illegible])

# நவாலி நரபலியும் நெஞ்சில் மூண்ட நெருப்பும்






“எங்கிருந்தோ வந்த புக்காரா விமானம் ஒன்று பிற்பகல் 4.47 மணியளவில் , சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தை நோக்கி குத்திட்டு, 13 குண்டுகளை போட்டுத்தள்ளி விட்டு, மேலெழும்பியது. உலகமே நடுங்குவதைப் போல பேரோசை. கணநேரத்துக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகிட, சுமார் 360 பேர் படுகாயங்களோடு போராடிக் கொண்டிருந்தனர்.”

09.07.1995

ஜுலை மாதத்தை இன்னும் கறுப்பாக்கும் முனைப்போடு அன்றை காலை கந்தகப் புகை நடுவே விடிந்தது. எறிகணைச் சத்தங்கள் காதைப் பிளக்க, உலங்கு வானூர்தி, குண்டுவீச்சு விமானங்கள் என இயந்திர வல்லூறுகளின் பறப்புகளால் வானமும் நிலமும் அதிர்ந்து கொண்டிருந்தன. 'ஒப்பிரேஷன் முன்னேறிப் பாய்தல்' என்ற பெயரோடு, யாழ். குடாநாட்டைக் கைப்பற்றும் படைநடவடிக்கை ஆரம்பித்திருந்தது. ஆனால் படையினர் நினைத்தது போல அவ்வளவுசுலபமாகமுன்னேறவோ,பாயவோ முடியவில்லை. புலிகள் சகல முனைகளிலும் பதிலடி கொடுத்துக்கொண்டிருந்தார்கள். எனவே தங்களுக்கு இழப்பை ஏற்படுத்தும் புலிகள் மீதான கோபத்தை எறிகணைகள் மூலமும், விமானக் குண்டு வீச்சு மூலமும் அப்பாவி மக்கள் மீது காட்டிக் கொண்டிருந்தது படைத்தரப்பு.

'ஒபிரேஷன் லிபரேஷன்' நடவடிக்கைக்குப் பின்னர் படைத்தரப்பால் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலை அவ்வளவு இலகுவில் கைவிட அப்போதைய சந்திரிக்கா தலைமையிலான அரசோ, பாதுகாப்பு பிரதியமைச்சரான ரத்வத்தையோ விரும்பவில்லை. தங்களுடைய ஆயுதப் பலத்தை உச்சபட்சமாகப் பிரயோகித்தேனும், முதற்கட்டமாக வலிகாமம் மேற்கு, வலி.தென்மேற்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்குப்பகுதிகளைக் கட்டுபாட்டில் கொண்டு வந்துவிட வேண்டுமென்பதில் அவர்கள் தீவிரமாக இருந்தனர். எறிகணை வீச்சின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. விமானங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தன. மெல்ல மெல்ல புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங் களை படையினர் தங்கள் ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவரத் தொடங்கினர்.

இனியும் வீட்டுக்குள் இருந்தால் படையினரின் கைகளில் சிக்கவேண்டிருக்கும் என்பதை உணர்ந்துகொண்ட மக்கள், யாழ்.நகரப்பகுதி நோக்கி, கையில் கிடைத்த பொருட்களுடன் இடம்பெயரத் தொடங்கினர். என்றாலும் எறிகணைகளும், இயந்திர வல்லூறுகளும் மக்களை ஓட ஓட வேட்டையாடின. எங்கும் கந்தகப்புகை. குருதி ஆறாக ஓடத்தொடங்கியது. பிணங்களைத் தாண்டிக் கோண்டு, ஆயிரக்கணக்கான குடும்பங்கள், குண்டு மழைக்குள் சிக்காமல் உயிர்பிழைக்க ஓடின.காலையிலேயே வீட்டை விட்டுப் புறப்பட்டதால், அன்னம் தண்ணியின்றி குழந்தைகளும், பெரியவர்களும் தவித்தார்கல். வழியில் நவாலி. சென் பீற்றர்ஸ் தேவாலயமும், சின்னக்கதிர்காம முருகன் கோயிலும் அவர்களுக்கு இளைப்பாற இடம் கொடுத்தன. ஏதிலிகளாக வந்தோருக்குத் தேவையான உணவு, தண்ணீர் உள்ளிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய களத்திலே இறங்கி சில கிராம சேவகர்களும் பணிபுரிந்து கொண்டிருந்தனர். கடவுளர்களை வழிபடும் இடமென்பதால் படைத்தரப்பு தங்கள் மீது தாக்காது என்ற நம்பிக்கையில் நூற்றுக்கணக்கானோர் அந்த இடத்தில் பாதுகாப்பான உணர்வோடு தம் களைப்பை இறக்கி வைத்துக் கொண்டிருந்தனர்.



நவாலி படுகொலை நாள்
09.07.1995

அப்போதுதான் அந்தக் கோரம் நிகழ்ந்தது.

எங்கிருந்தோ வந்த புக்காரா விமானம் ஒன்று பிற்பகல் 4.47 மணியளவில் , சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தை நோக்கி குத்திட்டு, 13 குண்டுகளை போட்டுத்தள்ளிவிட்டு, மேலெழும்பியது. உலகமே நடுங்குவதைப் போல பேரோசை. கணநேரத்துக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகிட, சுமார் 360 பேர் படுகாயங்களோடு போராடிக் கொண்டிருந்தனர். சென். பீற்றர்ஸ் தேவாலயமும், சின்னக் கதிர்காம முருகன் கோயிலும் சாம்பல் மேடாகின. காயம்பட்டோரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு போகவும் முடியாத நிலை. ஏதேனும் வாகனத்தில் ஏற்றிச் சென்றால், மேலே வட்டமிட்டுக் கொண்டிருக்கும் புக்காராவா, பொம்மரோ, ஹெலிகொப்டரோ வாகனத்தோடு எல்லோரையும் பலியெடுக்கக் காத்துக்கொண்டிருந்தன. அதனால் காயமடைந்த சிலரும் துடிதுடித்து, உறவுகளின் கண்முன்னே உயிர் துறந்தனர். ஒரு சில நிமிடங்களில் 147 உயிர்கள் அன்றைக்கு பலியெடுக்கப்பட்டது.

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர் செல்வி. ஹேமலதா செல்வராஜாவும், சில்லாலைப் பிரிவு சிரேஷ்ட கிராம அலுவலரான பிலிப்புப்பிள்ளை கபிரியேல்பிள்ளை ஆகியோரும், இடம்பெயர்ந்து வந்து கொண்டிருந்த மக்களுக்கு உணவு, குடிநீர் வழங்கிக்கொண்டிருந்த 48 தொண்டர்களும் உயிரிழந்த 147 பேரில் உள்ளடக்கம்.

இந்த நரபலிக்கு சிலநாள்களிலேயே புலிகள் பதிலடி கொடுத்தார்கள். 'புலிப் பாய்ச்சல்' நடவடிக்கை மூலம் முன்னேறிப்பாய்ந்த படையினர், விரட்டியடிக்கப் பட்டனர். அந்தச் சமரில், எந்தப் புக்காரா நவாலியில் 147 உயிர்களைக் காவு கொண்டதோ அதே புக்காரா என்ற அரக்கன் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

நவாலி நரபலி நிகழ்ந்து இன்றோடு 25 ஆண்டுகள் ( கால் நூற்றாண்டு) கடக்கின்றன. இதனையொட்டி நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும், சின்னக்கதிர்காமம் கந்தன் ஆலயத்திலும் இன்று விசேட வழிபாடுகளுக்கும், நினைவேந்தலுக்கும் ஏற்பாடாகியுள்ளது. ஆனால் அதற்கும் தடை போட அரசதரப்பு முயன்று வருகின்றது.

என்னதான் ஆயிரம் திரைகள் போட்டாலும், வரலாற்றில் குருதி கொண்டு எழுதப்பட்ட நவாலி நரபலி நினைவுகள் என்றைக்கும் தமிழர் மனங்களில் ஆறாவடுவாக இருக்கும்.



## வீடியோவை வெளியிடுவேன்

# செல்வம், சிவாஜியை மிரட்டும் கருணா

மட்டக்களப்பு, ஜூலை 9

**செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோர் தற்போது எனக்கெதிராகக் குரல் கொடுக்கிறார்கள். இவர்கள் விடுதலைப் புலிகளின் மேடைகளில் பேசிய வீடியோ பதிவு என்னிடம் உள்ளது. அதனை வெளியிட்டால் அவர்களுக்கெதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டியேற்படும் என்று கருணா அம்மான் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு கோடி ரூபா வீதம் இலஞ்சம் பெற்று அவர்களை வளப்படுத்தியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இருந்த சிவசக்தி ஆனந்தனே இதனைக் கூறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது மக்களுக்கு எவ்வளவு துரோகம் செய்துள்ளது என்பதை சிந்தித்துப் பாருங்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடாக முன்னாள் போராளிகளுக்கு என வந்த 21 கோடி ரூபா நிதி எங்கே என தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணிச் செயலாளர் கேள்வியெழுப்பியுள்ளார். இது அவர்களுக்குள்ளேயே இருந்து வரும் தகவல். அண்மையில் நான் ஒரு மணி நேரம் பேசிய விடயத்தை சுருக்கி வடிவமைத்து என்னைப் பற்றி ஊடகங்களில் தவறாகப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. சஜித் பிரேமதாஸ இப்பிரசாரத்தில் ஈடுபடுகிறார். இதனால் நானும் சில விடயங்களை வெளிப்படுத்தவேண்டியுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கம் வளருவதற்கு உதவியது ஐக்கிய தேசியக் கட்சி. பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் ஐந்தாயிரம் துப்பாக்கிகள், கைக்குண்டுகள், ஒரு கோடிக்கு மேல் ரவைகள் மற்றும் 25 கோடிக்கு மேல் பணம் தந்தார்கள். எனவே எங்களைச் சீண்டினால் பல விடயங்கள் வெளியிடப்படும். இந்தியப் படையுடன் போரிட்டு அவர்கள் வெளியேறிய பின்பு புலிகள் 350 பேர் மாத்திரமே மீதமிருந்தார்கள். அச்சமயம் விடுதலைப் புலிகளை மீண்டும் வளர்த்தவர் பிரேமதாஸ. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆதரவைக் குறைக்க வேண்டும் என்பதற்காக என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்தி பிரசாரம் மேற்கொண்டுள்ளனர் - என்றார். (ப)

## வன்னியில் வாக்குப்பெற்றவர்கள் வெளியாருக்கு வேலை வழங்கல்

### வன்னி மக்கள் காப்பக தலைவர் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 9

வன்னியில் பல இளைஞர்கள், யுவதிகள் படித்துவிட்டு வேலை வாய்ப்புக்களை நீண்டகாலமாக எதிர்பார்த்துக் காத்திருக்கையில் அவர்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றவர்கள் வெளிமாவட்டங்களில் வசித்து வரும் அவர்களது உறவினர்கள் ஆதரவாளர்களுக்கு வன்னி மாவட்டத்தில் அரச தொழிவாய்ப்புக்களை வழங்கி வருகின்றனர் என்று வன்னி மக்கள் காப்பகத்தின் தலைவர் நீல் சாந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாங்கள் இங்கு கல்வித்திட்டங்கள், செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது ஆரம்பப் பிரிவு முன்பள்ளி ஆசிரியர்களின் அடிமட்டச் செயற்பாடுகளை மையப்படுத்தியும் கட்டியமைக்கும் பணிகளைச் செயற்படுத்தியும் வருகின்றோம். தேர்தலின் பின்னர் எனது சொந்த நிதியையும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதியையும் சேர்த்துக் கொண்டு பல்வேறு வேலைத் திட்டங்களை அதிகமாகச் செய்து கொள்ள முயற்சித்துவருகின்றேன். இக்கலந்துரையாடலில் நீங்கள் கலந்து கொண்டபோதும் உங்களுடைய கிராம பொதுத் தேவைகளை முன்வைக்கவும் நீங்கள் எதிர்பார்த்து வந்துள்ளீர்கள். இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களையும் உங்களுடைய கிராமங்களின் தேவைகளையும் நாங்கள் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கின்றோம். உங்களுடைய கிராமத்தின் தேவைகளை உங்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றவர்கள் சரிவர மேற்கொள்ளவில்லை. அவர்கள் வெளிமாவட்டத்திலுள்ளவர்களுக்கும், தமது ஆதரவாளர்களுக்குமே அரச தொழில்வாய்ப்புக்களை வழங்கி வருகின்றனர். இதனால் இங்குள்ள படித்த இளைஞர்கள் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் படித்த வேலைக்கு தகுதியற்ற வேலைகளையும் செய்து வருகின்றனர் - என்றார். (ப)

## கூட்டமைப்பின் 10 வேட்பாளர்களும் ஒரே மேடையில் ஏறுவார்களா?

### முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கிண்டல்

கிளிநொச்சி, ஜூலை 9

கூட்டமைப்பில் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களில் போட்டியிடுகின்ற 10 வேட்பாளர்களும் முடிந்தால் ஒரே மேடையில் ஒற்றுமையாக இருந்து ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்த முடியுமா? பத்து பேருக்குள்ளும் பத்துவிதமான கருத்துக்கள், ஒருவருக்கொருவர் குழிபறிக்கின்ற செயற்பாடுகள். கட்சிக்குள் அடிபாடுகள், மாறிமாறி ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்துகின்றனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தங்களோடுதான் இருக்கின்றார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் தெரிவித்துள்ள கருத்து தமிழ் மக்களை முட்டாள்களாக்கும் கருத்து. தமிழ் மக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் இந்தத் தேர்தலில் ஏமாற்றுவதற்கு இவ்வாறான அறிக்கைகளை விடுகின்றனர். பிராந்திய அரசியல் நலன்கள் சார்ந்து இந்தியா எப்பொழுதும் கொழும்போடுதான் இருந்துள்ளது. இன்றும் இருந்து வருகிறது. சர்வதேச நாடுகள் அனைத்தும் ஏனைய நாடுகளின் எந்த விடயத்திலும் தலையிடுகின்றபோது தங்களின் நலன்களிலிருந்து சிந்தித்தே முடிவுகளை எடுத்து வருகின்றன. மாறாக அவர்கள் தமிழ் மக்கள் மீதான அக்கறையால் அல்ல. போர் நிறைவுற்று கடந்த 10 வருடங்களாக தமிழ் மக்களின் விடயத்தில் சர்வதேச நாடுகளின் செயற்பாடுகள் இவ்விதமே இருந்து வருகின்றன. ஆனால் ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் முன் சர்வதேசம் என்ற மாயமானைக் காட்டி வாக்குகளைப் பெற்று தங்களை வளப்படுத்திக்கொண்டார்களே தவிர தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள உடனடிப் பிரச்சினைகளைக் கூட நிவர்த்தி செய்யவில்லை. தங்களுக்குள் ஒற்றுமையின்றி இருந்து கொண்டு தமிழ் மக்களை ஒற்றுமையாக தங்களுக்கு வாக்களிக்கக் கோருவது கேலிக்கூத்தான செயற்பாடு- என்றார். (ப-214)

## மாவைக்கு ஆதரவாக வீடு வீடாக பிரசாரம்

கரணவாய், ஜூலை 9

தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராஜாவை ஆதரித்து தொண்டமானாறு கிராமத்தில் வீடுவீடாக தேர்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த பிரசார நடவடிக்கையில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான அ. பரஞ்சோதி. தர்மலிங்கம் ஜனநாயகப் போராளியின் கட்சித் தலைவர் வேந்தன் மற்றும் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த ஜே. எக்ஸ். குலநாயகம் உட்பட பலரும் வீடு வீடாகச் சென்று ஆதரவு திரட்டினர். (ப-108)

தேர்தல் களம்

## தமிழ் மக்களின் பிரச்சினைகளை தமிழ்த் தலைவர்கள் தெரிவிக்கவில்லை

### மஹிந்த யாப்பா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 9

தமிழர்களது பிரச்சினைகளைத் தமிழ்த் தலைமைகள் தெரிவிக்கவில்லை என்று முன்னாள் பிரதியமைச்சர் மஹிந்த யாப்பா அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

சிங்கள அச்சு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் வடபகுதிக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டுமென இம்முறையும் தமிழ் அரசியல்வாதிகள் கோரி வருகின்றமை குறித்து அரசின் நிலைப்பாடு என்ன? என அந்த நேர்காணலில் முன்வைக்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர்;

தமக்குள்ள பிரச்சினைகள் எவை என்பது குறித்து முதலில் அவர்கள் தெரிவிக்க வேண்டும். பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்கு முன்னர் அது குறித்து தெளிவு பெற்றிருத்தல் அவசியமாகும். பிரச்சினைகள் எவை என கடந்த காலம் முழுவதும் அவர்களிடம் கேட்டிருந்தோம். கடைசியில் அந்தப் பிரச்சினைகள் குறித்து எதுவும் கூறாது தனி நாட்டுக் கோரிக்கையை அவர்கள் முன்வைக்கின்றனர். தனியான நிர்வாகம், தனிநாடுஎன்பவை குறித்துப் பரிசீலிக்க நாம் தயாராயில்லை - என்றார். (ப-ச)

## மொட்டுக்குத் தாவினார் வண்டில் சின்ன உறுப்பினர்

### முல்லையில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜூலை 9

புதுக்குடியிருப்பில் வண்டில் சின்னத்தில் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்டு பிரதேச சபை உறுப்பினராகத் தெரிவான சுரேஸ் தற்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வன்னிமாவட்ட வேட்பாளர் ஜனக நந்தகுமாரை ஆதரித்து முல்லைத்தீவில் தேர்தல் பரப்புரை ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போதே அவர் மொட்டுக் கட்சிக்கு மாறினார்.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர்;

எமது தமிழ் மக்கள் மிகவும் எதிர்பார்த்து இருக்கின்ற தேர்தலாக வரப்போகும் தேர்தல் அமைந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ் தலைவர்கள் தமிழ்த் தேசியம் பேசி நாடாளுமன்றம் சென்று அவர்கள் என்ன செய்தார்கள் என்று உணர்ந்த மக்களாக நாங்கள் இருக்கின்றோம். எங்கள் அரசியல் தலைவர்கள் கடந்த பத்து ஆண்டுகளாக ஒவ்வொரு தீபாவளிக்கு முன்னும் தீர்வு எனச் சொல்லிச் சொல்லி தமிழர்களை ஏமாற்றினார்கள். எமது தமிழ் மக்களின் ஏக்கம், நோக்கம் நிறைவுபெறவேண்டும் என்றால் அரசகட்சியை வெற்றி பெறச் செய்யவேண்டும் அதன் மூலம் மக்களின் எதிர்பார்ப்பை அபிவிருத்தியை நிறைவுசெய்ய வேண்டும் - என்றார். (ப-19)

# தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது?

## பொலிஸார் - யாழ்.செயலக அதிகாரிகள் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல்

**யாழ்ப்பாணம், ஜூலை 9**
**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை சுயாதீனமாக நடத்துவது தொடர்பில், யாழ்ப்பாண மாவட்ட பொலிஸாருக்கும் யாழ்ப்பாண மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.**



யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க. மகேசன் தலைமையில் நேற்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர்;

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு மாவட்டச் செயலகத்தில் பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். அதனடிப்படையில் இன்றைய தினம் யாழ்ப்பாண மாவட்டப் பொலிஸாருடன் ஒரு சந்திப்பை மேற்கொண்டிருந்தோம். இந்தச் சந்திப்பின்போது யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சர்கள், யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு பொலிஸாரும் யாழ்ப்பாண தேர்தல் திணைக்களமும் இணைந்து பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில் எவ்வாறு இந்த வேலைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், மற்றும் சட்டம் ஒழுங்கை அவர்கள் எவ்வாறு இந்தச் சந்தர்ப்பத்தில் நிலைநாட்ட முடியும் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தோம்.

அதனடிப்படையில் நாங்கள் முன்கூட் டியே திட்டமிட்டு இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு தரப்பினரும் எவ்வாறு செயல்படுதல் என்பது தொடர்பில் ஆராய்ந்திருந்தோம். வாக்களிப்பு நிலையத்தின் பாதுகாப்பு அதேபோன்று வாக்கு கணக்கிடும் நிலையத்தின் பாதுகாப்பு, போக்குவரத்து நடைமுறைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் பொலிஸ் தரப்பில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் முக்கியமாக ஆராய்ந்தோம். அதன் அடிப்படையிலே பொலிஸ் தரப்பினர் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு இணங்க மாவட்டச் செயல கத்துடன் இணைந்து தேர்தல் செயற்பாடுகளை முன்னெ டுப்பதாக பொலிஸாரால் தெரி விக்கப்பட்டது- என்றார். (ப-111)

## சட்டவிரோத மரக்குற்றிகளுடன் ஏழு பேர் கைது

சட்டவிரோத மரக்குற்றிகளை அரிந்த ஏழு பேர் ஏறாவூரில் கைதுசெய்யப்பட்டுள்ள னர். அவர்களிடமிருந்து சுமார் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகள் மற்றும் அரியப்பட்ட பலகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மரக்குற்றிகளை வாகனம் ஒன்றில் ஏற்றி ஆலையில் தரித்து வைத்திருத்தமை மற்றும் சட்டவிரோதமாகப் பெறப்பட்ட மரக்குற்றிகளை ஆலையில் அரிந்தமை ஆகிய குற்றச்சாட்டின்பேரில் மேற்கண்ட ஏழு பேரும் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் முற்படுத்தப்பட்டதையடுத்து தலா இரண்டு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டமையுடன் எதிர்வரும் ஓகஸ்ட் 24ஆம் திகதியன்று நீதிமன்றில் ஆஜராகுமாறும் கட்டளையிடப்பட்டுள்ளது. (ரி3)

## பாடசாலை வாகனங்களுக்கு மஞ்சள் வர்ணம்

கொழும்பு, ஜூலை 9

பாடசாலை வாகனங்களுக்கு எதிர்காலத்தில் குறிப்பிட் வர்ண குறியீடை கட்டாயமாக்க தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகன உரிமையாளர் சங்கத்துடனான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்கள் அனைத்துக்கும் மஞ்சள் வர்ணம் பூசப்பட வேண்டுமென முன்மொழிந்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். எனினும் அதற்குரிய செலவீனம் தொடர்பில் வாகன உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியதையடுத்து, தற்காலிகமாக வாகனங்களில் மஞ்சள் வர்ணக் கோடு இடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ரி)



புலமைப்பரிசிலில்

## சித்தியடைந்த மாணவர்களுக்கு ஆரக்ஸாவ திட்டத்தின் கீழ் நிதியுதவி

மட்டக்களப்பு, ஜூலை 9

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஆரக்ஸாவ ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் மட்டக்களப்பிலுள்ள தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு, புலமைப்பரிசில் காசோலைகள் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவால் வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில், பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய மாணவி வரதநாதன் லிதுஷ்கா, எருவில் கண்ணகி மகா வித்தியாலய மாணவி மதியழகன் கிரிஸ்மிதா, குருக்கள் மடம் கலைவாணி மகா வித்தியாலய மாணவி ஜெயரூபன் கேசகி, மட்டக்களப்பு கோட்டமுனை கனிஸ்ட வித்தியாலய மாணவன் துருபதன் தபீஷண ஆகியோருக்கான [illegible] பரிசில் [illegible] காசோலைகள் வழா [illegible] 3-46)

# அரசியலை கைவிட பாலித முடிவு அரசியல் பழிவாங்கலே காரணம்



கொழும்பு, ஜூலை 9

தாம் அரசியலில் இருந்து ஒதுங்கி, தனது குடும்பத்துடன் சுதந்திரமாக வாழ முடிவுசெய்துள் ளார் என்று களுத்துறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவரப்பெரும தெரிவித்துள்ளார். தேர்தல் தினம் அறிவிக்கப்பட்ட நாள் முதல் தன்னையும், தன் குடும்பத்தின ரையும் குறிவைத்து மத்துகம பொலிஸார் அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டுள்ளமையைத் தொடர்ந்தே இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

மேலும், தான் அரசியல்ரீதியாக ஐ.தே.கவுக்கோ, அதன் தலைமைக்கோ எதிராகச் செயற்படவில்லை எனவும், சஜித் பிரேமதாஸ ஐ.தே. கட்சிக்கு எதிராகச் செயற்பட்டபோது,தாம் அவருக்கு எதிராகச் செயற்பட்டமையால் தாம் படுதோல்வியடைவோம் என்ற பயத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு சில கைக்கூலிகளே இதன் பின்னணியில் செயற்படுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 3ஆவது முறையாகவும் மத்துகம பொலிஸார் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் வந்து, எசல போயா தினத்தன்று நடந்த நிகழ்வில் வைக்கப்பட்டிருந்த தனது கட்அவுட் ஒன்றை கிழித்தெறிந்ததுடன், தனது கட்சிக் காரியாலயத்தையும் உடைத்தனர் எனவும் தெரிவித்துள்ள அவர், இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர், பதில் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார். (ரி3)

# தென்மராட்சியில் உத்தரவாதக் கல்வித் திட்டம்

சாவகச்சேரி ஜூலை 9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி உயர்கல்வியைப் பெறமுடியாத மாணவர்களுக்கான, 13 வருட உத்தரவாதக் கல்வித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவற்றில் இணைய விரும்புவோர் அந்தப் பாடசாலைகளின் அதிபர்களுடன் தொடர்புகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிமனையினர் அறிவித்துள்ளனர். (ரி3-9)

# 55 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் பேரம்பலம் பொன்னுச்சாமி (PT மாஸ்டர்)

(பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி,
வேலணை மத்திய மகாவித்தியாலயம் - முன்னாள்
விளையாட்டுத்துறை ஆசிரியர்,
இலங்கை விளையாட்டுத்துறையின் முன்னாள் அதிகாரி)



அன்னையின் மடியில்
21.03.1935

அம்பிகையின் அரவணைப்பில்
17.05.2020

எங்கள் அன்புத் தெய்வமே!
ஓடிச் சென்றது நாள்கள் ஐம்பத்தைந்து!
தேடி முடியாத மனிதம் தொலைந்தது!
பாசமிகு அப்பா இங்கில்லையே!
பண்பினிலே சிறந்த மாமா இனியில்லையே!
உயிராயுருகி அரவணைத்த தாத்தா எமக்கில்லையே!
எங்கள் இதயத்தில் ஓர் வெற்றிடம்!
அதை நிரப்பிட இனி யாருமில்லையே!
உறைந்து போனோம் உங்கள் பிரிவால்!
நித்தமும் உங்கள் நினைவுகள் எமை வழி நடத்தும்!

கடந்த 17.05.2020 அன்று சிவபதமடைந்த எம் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 09.07.2020 அன்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 11.07.2020 அன்று Bromption Ont, Canada விலும். எமது இல்லத்தில் நாளை (10.07.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.**

எங்கள் அன்புத் தெய்வம் சிவபதமடைந்த செய்திகேட்டு எமக்கு பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும், தொலைபேசி மற்றும் வேறுவகையில் துயர் பகிர்ந்த அன்புள்ளங்களுக்கும், மலர் வளையங்கள் சாத்தியும், கண்ணீர் அஞ்சலிகளைப் பத்திரிகைப் பிரசுரம் மூலம் தெரிவித்தவர்களுக்கும் இருகரம் கூப்பி எமது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

38/1, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
072 956 7536
021 221 9287

(J 12376) (13.17)


நாய்மீது துப்பாக்கிச் சூடு

# சந்தேக நபருக்குக் கிடைத்தது பிணை

வவுனியா, ஜுலை 9

வவுனியா- செட்டிகுளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வளர்ப்பு நாய் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டார் என்று சந்தேகிக்கப்படும் கிராம அலுவலரை பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த வெள்ளிக்கிழமை மாலை செட்டிகுளம் பகுதியில் வீடொன்றிற்குள் நுழைந்த அயல்வீட்டு நாய் குரங்குகளை துரத்துவதற்காக பயன்படும் துப்பாக்கியானால் சுடப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.

இந்நிலையில் இது தொடர்பாக வளர்ப்பு நாயின் உரிமையாளரால் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்தது.

இரு தரப்பினரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணைகளை மேற்கொண்ட செட்டிகுளம் பொலிசார் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் கிராம அலுவலரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இந்த நிலையில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

(ம-110)


# 25 ஆவது ஆண்டு நினைவு தினம்



பிறப்பு
19 . 01 . 1979

இறப்பு
09 . 07 . 1995

## அமரர் செல்வராசா பிரதீஸ் (பிரசாத்)

ஆண்டுகள் 25 ஓடி மறைந்தாலும்
உம்மை நாம் மறப்போமா
இளம் வயதில் எம்மை பிரியா
பெருந்துணையாய் இருந்தீரே
கணப் பொழுதில் எம்மைப் பிரிந்து
நெடுந்தூரம் சென்றீரே
ஆயிரம் உறவுகள் கொண்டு
குடும்ப உறவுகள் உம்மை நினைத்து
கண்ணீர் சிந்துகின்றோம்
எம் மனதில் என்றும் நீர் நிலைத்திருப்பீர்
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

கலையரசு வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

பிறப்பு
21 . 08 . 1941



இறப்பு
07 . 07 . 2020

## அருளானந்தம் தம்பு - கிளமன்ற் ஜோஜ்

(ஓய்வுபெற்ற O.T.S Officer - Colombo)

யாழ்ப்பாணம், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், இல.42ஈ எஸ் பெர்ணாண்டோ மாவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் தம்பு - கிளமன்ற் ஜோஜ் கடந்த (07.07.2020) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி அருளானந்தம் தம்பு மரியம்மா தம்பு தம்பதியரின் புதல்வனும் தேவி கிளமன்ற் ஜோஜ் இன் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை அருளானந்தம் ஞானம்மா அருளானந்தத்தின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான ஜோசவ் செல்வராசா தம்பு, இம்மானுவேல் துரைராஜா தம்பு, கிறிஸ்ரி சிங்கராஜா தம்பு, நவராசா தம்பு மற்றும் இவ்வுலகில் வாழும் கீத பொன்கலன் பொன்ராசா தம்பு (கனடா), செல்வராசா தம்பு (பிரான்ஸ்), அருளானந்தம் அன்ரனி அலோசியஸ் தம்பு (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதி இரங்கல் அஞ்சலி இன்று (09.07.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# அடிப்படைவாதிகளை வைத்து அரசமைப்பை தயாரித்த நாடுகளுக்கு நேர்ந்ததை மறவாதீர்

முன்னாள் நிதி அமைச்சர் மங்கள எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 9
மதகுருமார்களையும், அடிப்படைவாதிகளையும் இணைத்துக்கொண்டு அரசியலமைப்பைத் தயாரித்த நாடுகளுக்கு நேர்ந்த கதியை மறந்துவிடக்கூடாது என்று கூறியிருக்கும் முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர, அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அவற்றை குப்பைக்கூடைக்குள் வீசியெறிவதே இலங்கையர்களின் பொறுப்பு என்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டு அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மாற்றியமைக்கப்போவதாக ஆளும்தரப்பினர் கூறிவரும் நிலையிலேயே மங்கள சமரவீர இத்தகைய கருத்தொன்றை வெளியிட்டிருக்கிறார்.

மதகுருமார்கள், தீவிரவாதிகள் மற்றும் அடிப்படைவாதிகளை இணைத்துக் கொண்டு அரசியலமைப்பைத் தயாரிப்பதில் ஈடுபட்ட நாடுகளுக்கு என்ன நடந்தது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. மேலும் இத்தகைய மோசமான முயற்சிகள் அனைத்தும் வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதை உறுதிசெய்வதொன்றே அனைத்து இலங்கையர்களினதும் கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா சிவகுமார்**

அன்னை மடியில்
02.06.1966

ஆண்டவன் அடியில்
09.07.2010

ஆண்டுகள் பத்து ஆயிடினும்
உன் அன்பு முகம் மறகவில்லை
ஈன்று உம் நினைவாய் இருந்தே
நாம் தவிக்கின்றோம் - தூண்டாமணி
விளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்தீர் - இன்று
வேண்டித் துதித்தே நாம் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம், சாவகச்சேரி.

பெற்றோர்,
சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர்.


## மாரடைப்பால் முதியவர் உயிரிழப்பு

உணவருந்திவிட்டு இரவு படுக்கைக்குச் சென்ற முதியவர் ஒருவர் மார்பு வலி ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் சாவகச்சேரி தனங்களப்பில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த நமசிவாயம் வல்லிபுரநாதன் (வயது - 74) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மருத்துவமனையில் நடைபெற்ற மாதாந்த கிளினிக்குக்குச் சென்ற குறித்த முதியவர், தனது மகள் வீட்டில் தங்கிவிட்டு மாலையில் தனது வீட்டுக்குச்சென்றுள்ளார். அங்கு இரவு உணவு அருந்திவிட்டு படுக்கைக்குச் செல்ல முற்பட்டவேளை நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. உடனேயே மருத்துவமனைக்கு கொண்டுசென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவரால் தெரிவிக்கப்பட்டதாக அவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல்செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி3-9)


## மரண அறிவித்தல்



பிறப்பு
30 . 04 . 1945

இறப்பு
07 . 07 . 2020

**நமசிவாயம் வல்லிபுரநாதன்**

மறவன்புலோவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் வல்லிபுரநாதன் 07.07 2020 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான குமரையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கரத்னத்தின் அன்பு கணவரும் வசந்தி (கனடா), வசந்தரூபன் (லண்டன்), செவ்வந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசலிங்கம் (கனா -கனடா ) சுகமதி (லண்டன்) சோதிலிங்கம் ஆகியோரின் மாமனாரும், சேருஜன் (கனடா), யதுஷன் (கனடா), அபிசன் ( லண்டன்), அன்ஷிகா ( லண்டன்), சகிலன், மதுமிலன், நிவேதிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று( 09.07. 2020) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக தனிப்பனை இந்து மயானத்துக்கு முற்பகல் 11 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மறவன்புலோ,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21 . 02 . 1940

மறைவு
09 . 07 . 2019

அமரர் திருமதி **பரமேஸ்வரி கணேசு**

அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி எமைவிட்டு
சென்றதேனோ!

கருணை நிறைந்த உங்கள் முகம் காண
கவலையுடன் தேடுகின்றோம்

இறையடி தொண்டு செய்தால் தானோ...!
இறைவன் தங்களை தன்னோடு கொண்டு சென்றான்

துயர் உற்ற வேளையில் எம் துயர் துடைத்தீர்கள்
இன்று எங்கள் துயர் பகிரவோ எம்மோடு
தாயே! நீங்கள் இல்லை!

ஆண்டொன்று ஆனதம்மா உங்கள்
அரவணைப்பை நாங்கள் இழந்து
அம்மா உங்கள் நீங்காத நினைவலைகளுடன்
இறைவனைக் கேட்கின்றோம்
கருணை நிறைந்த கடவுளே மீண்டும் ஒரு கருவறை
தந்தால் எம் அன்னையின்
வயிற்றில் உதிக்கும் வரத்தை தந்திடுவாய்!

மூத்தவிநாயகர் கோயில்
கரணவாய்,
கரவெட்டி.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்



## வேலையாள்கள் தேவை

**U.S Hotel** நிறுவனத்திற்கு

பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்

- அறை சுத்திகரிப்பாளர்கள் பெண் (House Keeping)
- சமையல் உதவியாளர்கள் (Kitchen Helper)
- கணக்கு உதவியாளர்கள் பெண் (Account Assistant)

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் U.S. Hotel நிறுவனத்திற்கு இன்று (09.07.2020) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு: U.S.Hotel
855, Hospital Road, Jaffna. 077 008 3000



யாழில்

## டோனியின் பிறந்த தினத்தை கொண்டாடிய ரசிகர்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 9
இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் மகேந்திர சிங் டோனியின் பிறந்த தினத்தை யாழ்ப்பாண ரசிகர் மன்றத்தினர் நேற்று முன்தினம் கொண்டாடி மகிழ்ந்தனர்.
அந்தவகையில் இரசிகர் மன்றத்தினர் அன்று காலையில் இரத்த வங்கியில் இரத்த தானம் வழங்கியும், மதியம் கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கியும் பிறந்தநாளைக் கொண்டாடி மகிழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி2-20)


## எவ்.ஏ. கிண்ணம் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

கரணவாய், ஜூலை 9
வடமராட்சி கால்ப் பந்தாட்டச் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சங்கத் தலைவர் இல்லத்தில் இடம்பெற்றது.
இக் கலந்துரையாடல் கால் பந்தாட்டச் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுத் தலைவர் ரி.வரதராசன் தலைமையில் நடைபெற்றது. இதில் இலங்கை கால்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணக் கால்ப் பந்தாட்டப் போட்டி தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் அப் போட்டியில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டன.
குறித்த விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். இக் கலந்துரையாடலில் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களான அ.வசந்தன், சி.வசந்தகுமார் மற்றும் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி2-108)

## கரீபியன் ரி20 லீக்கில்

# இந்திய வீரர் பிரவீன் தாம்பே!

புதுடெல்லி, ஜூலை 09
கரீபியன் பிரிமீயர் ரி20 லீக்கில் இந்தியாவைச் சேர்ந்த 48 வயதான பிரவீன் தாம்பே, டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணியால் ஏலம் எடுக்கப்பட்டுள்ளார்.



மும்பை கிரிக்கெட் அணிக்காக முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியவர் பிரவீன் தாம்பே. இவர் 41 வயதில் ஐபிஎல் ரி20 லீக்கில் அறிமுகமானார்.
ஆனால், அதன்பின்னர் அதிக வயதில் ஐபிஎல் போட்டியில் விளையாடியவீர் என்றபெருமையைபெற்றார். கடந்த வருடம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இவரை ஏலம் எடுத்துள்ளது. ஆனால், ரி10 லீக்கில் விளையாடியதால் ஐபிஎல் தொடரில் விளையாட அனுமதி இல்லை என்று பிசிசிஐ தெரிவித்தது. இதனால் கொல்கத்தா அணி அவரை நீக்கியது.
இந்த நிலையில், கரீபியன் பிரிமீயர் லீக்கில் விளையாடுவதற்கான வீரர்கள் ஏலத்தில் பங்கு பெற விண்ணப்பம் செய்தார். அவரை டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணி ஏலம் எடுத்துள்ளது.
இது குறித்து பிரவீன் தாம்பே தெரிவிக்கையில்;
நான் உடற்தகுதியாக இருந்த போதிலும் பிசிசிஐ என்னை விளையாட அனுமதிக்கவில்லை. அப்படியிருக்கும் போது நான் ஏன் மற்ற லீக்குகளில் விளையாடக்கூடாது. நான் இந்தியாவிற்கு வெளியே நடைபெறும் லீக்கில் விளையாட தகுதி பெற்றுள்ளேன். இதனால் டிரின்பாகோ அணி என்னைஏலம்எடுத்துள்ளது. வெஸ்ட் இண்டீஸ் செல்வதற்கு முன் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்வேன் என்றார்.
கரீபியன் பிரிமீயர் லீக் ஆகஸ்ட் 18 ஆம் திகதியில் இருந்து செப்டம்பர் 10 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. கரீபியன் பிரிமீயர் லீக்கில் விளையாட இருக்கும் முதல் இந்திய வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி2)



## டோனிக்கு வாய்ப்பளித்தது பெருமை!

டோனிக்கு வாய்ப்பு கொடுத்தது பற்றி, இந்திய அணியின் முன்னாள் தலைவரான கங்குலி விளக்கமளித்துள்ளார். இந்திய அணி ஒரு சரியான முடிவு இல்லாமல் திணறிக் கொண்டிருந்த போது, இதோ நான் இருக்கிறேன் என்பது போல் தன்னுடைய அற்புதமான ஆட்டத்தின் மூலம், சிறந்த பினிஷராக மட்டுமின்றி, அணிக்கு சிறந்ததலைவராகவும்டோனி உருவெடுத்தார். இப்போது நாம் டோனியை இப்படிக் கொண்டாடுகிறோம் என்றால், அதற்கு முக்கிய காரணம் கங்குலி தான் .ஏனெனில் முதல் போட்டியில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் டோனிநடையைக் கட்டினார். இதனால் அடுத்து இவருக்கு வாய்ப்பு கிடைக்குமா என்ற போது, பாகிஸ்தான் தொடரில் மூன்றாவது வீரராக களமிறக்க வாய்ப்பு கொடுத்தார் கங்குலி, அந்தப் போட்டியில் டோனி 148 ஓட்டங்கள் குவித்தார்.
அதன் பின்னர், டோனி தொட்டது எல்லாம் வெற்றி என்பது போல்தான் அமைந்தது. இந்நிலையில், டோனியை அறிமுகம் செய்தது குறித்து பிசிசிஐ நேரலையில் மயங்க் அகர்வால் கங்குலியிடம் கேட்டபோது, சிறந்தவீரர்களை தெரிவு செய்வது என்பது எனது கடமை. ஒரு தலைவனாக நான் அனைத்து விதத்திலும் யோசித்து செயல்பட வேண்டும். சில நேரங்களில் உள்ளுணர்வு தோன்றும்.
அந்த உள்ளுணர்வை கேட்டால் நிச்சயம் நல்ல பலனே கிடைக்கும். அதன்படி டோனி விஷயத்திலும் எனக்கு அவ்வாறு தான் தோன்றியது டோனி ஒரு மிகச்சிறந்த வீரராக இந்திய அணிக்கு இருப்பார் என்று நான் உறுதியாக நம்பினேன். அவருக்கு நான் வாய்ப்பளித்தமை குறித்து மிகவும் பெருமை அடைகிறேன். இந்த அளவிற்கு டோனி இன்று உயர்ந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.
அவர் நல்ல பினிசர் மட்டுமல்ல ஒரு சிறந்த வீரரும் கூட ஏனெனில் நான் தலைவராக இருந்தபோது அவரை மூன்றாவது இடத்தில் இறக்கி விட்டு பல போட்டிகளில் சிறப்பாக விளையாட வைத்திருக்கிறேன் என்று புகழாரம் சூட்டினார். (ரி2)

# பார்சிலோனா அணி அபார வெற்றி!

மாட்ரிட், ஜூலை 9
லா லிகா கால்பந்து போட்டியில் கடந்த திங்கட்கிழமை நடந்த லீக் ஆட்டத்தில் பார்சிலோனா அணி அபார வெற்றி பெற்றது.
20 அணிகளுக்கு இடையிலான லா லிகா கால்பந்து போட்டி ஸ்பெயின் நாட்டில் நடந்து வருகிறது. இதில் கடந்த திங்கள் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியன் பார்சிலோனா கழகம், வில்லார் ரியல் அணியை எதிர்கொண்டது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே பார்சிலோனா அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 3 ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் கிரிஸ்மான் கோலை நோக்கி அடித்த பந்தை வில்லார் ரியல் அணி வீரர் பாய் டாரெஸ் பதற்றத்துடன் தடுக்க அது சுய கோலாகமாறியது. 14ஆவது நிமிடத்தில் வில்லார் ரியல் அணி வீரர் ஜெரார்ட் மொரினோ பதில் கோல் திருப்பினார்.



20 ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் லூயிஸ் சுவாரஸ் பந்தை கோலுக்குள் திணித்தார். 45 ஆவது நிமிடத்தில் மெஸ்சி கடத்தி கொடுத்த பந்தை சக வீரர் கிரிஸ்மான் கோலாக மாற்றினார். முதல் பாதியில் பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.
பின்பாதியிலும் பார்சிலோனா அணியின் ஆதிக்கமே தொடர்ந்தது. 87 ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் அன்சு பாட்டி கோல் அடித்தார். முடிவில் பார்சிலோனா அணி 4-1 என்ற கோல் கணக்கில் வில்லார் ரியலை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. கடந்த 2 ஆட்டங்களில் 'டிரா' கண்டதால் சரிவைச் சந்தித்து இருந்த பார்சிலோனா அணி இந்த வெற்றியின் மூலம் எழுச்சி பெற்றுள்ளது. முன்னதாக நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் முன்னாள் சாம்பியனான ரியல் மாட்ரிட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் அத்லெடிக் கழகத்தை வீழ்த்தியது.
கடந்த 6 ஆம் திகதி லீக் ஆட்டங்கள் முடிவில் ரியல் மாட்ரிட் அணி 34 ஆட்டங்களில் விளையாடி 23 வெற்றி, 8 டிரா, 3 தோல்வியுடன் 77 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் தொடர்கிறது. பார்சிலோனா அணி 34 ஆட்டங்களில் ஆடி 22 வெற்றி, 7 டிரா, 5 தோல்வியுடன்73புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளது.
வில்லார் ரியல் அணியை வீழ்த்தி 3 புள்ளிகள் பெற்றதன் மூலம் பார்சிலோனா கழக அணி சாம்பியன் பட்ட வாய்ப்பில் நீடிக்கிறது. (ரி2)

# உலக சுகாதார அமைப்பிலிருந்து வெளியேறுகிறது அமெரிக்கா!

**நியூயோர்க் ஜூலை 9**

**உலக சுகாதார அமைப்பிலிருந்து வெளியேறும் முறைப்படியான பணியை அமெரிக்கா தொடங்கியுள்ளது.**



கொரோனா வைரஸ் பரவல் குறித்த உண்மையான தகவல்களை உலக சுகாதார அமைப்பு மறைத்துவிட்டது. உலக சுகாதார அமைப்பின் தலைவர் சீனாவுக்கு ஆதரவாகச் செயல்படுகிறார் என்று ட்ரம்ப் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வந்தார்.

உலக சுகாதாரஅமைப்புக்கு வழங்கும் நிதியை நிறுத்தி வைப்பதாகவும், விரைவில் அந்த அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேறும் எனவும் ட்ரம்ப் கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்தார்.

இந்த நிலையில் உலக சுகாதார அமைப்பிலிருந்து முறைப்படி வெளியேறுவதற்கான கடிதத்தை ஐ.நா. சபையில் அமெரிக்கா கையளித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா. பொதுச்செயலாளருக்கான செய்தித்தொடர்பாளர் ஸ்டானே துஜாரிக் தெரிவித்துள்ளதாவது:

உலக சுகாதார அமைப்பிலிருந்து அடுத்த ஓர் ஆண்டில் வெளியேறுகிறோம் என்பதற்கான முறைப்படியான கடிதத்தை அமெரிக்கா ஜூலை 6ஆம் திகதி வழங்கியுள்ளது.

இந்தக் கடிதம் கையளிக்கப்பட்டு ஓர் ஆண்டில் அதாவது 2021 ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் திகதி நடைமுறைக்கு வரும்.

உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேறுவதற்கான அனைத்து நடைமுறைகளும், விதிகளும் சரியாக இருக்கிறதா என்பதை பொதுச் செயலாளர் ஆய்வு செய்வார்" எனத் தெரிவித்தார். (ரி1)

## சிரியாவில் அரச படை போர்க்குற்றம்: ஐ.நா. அறிக்கையில் சுட்டிக்காட்டு



நியூயோர்க், ஜூலை 9

சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் அரச படைகள் மற்றும் ரஷ்யா இணைந்து போர்க் குற்றங்கள் புரிந்துள்ளன என்று ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியுடனான போர் நிறுத்தத்திற்கு முன்னர், சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் அரசுப் படைகள் மற்றும் கிளர்ச்சியாளர்கள் கடுமையான தாக்குதலை நடத்தினர். இதில் நூற்றுக்கணக்கான மக்கள் பலியாகினர். ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை அறிக்கை வெளியாகியுள்ளது. அதில், இட்லிப் மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகள், பாடசாலைகளில் சிரிய அரசுப் படைகள் மற்றும் ரஷ்யப் படைகள் இணைந்து வான்வழித் தாக்குதலை நடத்தி போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளன என்றும் சிரிய அரசுக்கு ஆதரவான படைகள் போர் விதிகளை மீறியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்கள் தரப் பினரும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் ஐக்கிய நாடு கள் சபையின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ரி1)

கீழடி கொந்தகை அகழ்வாய்வில்

## ஒரு குழந்தையின் எலும்புக்கூடு!

சென்னை, ஜூலை 9

கீழடி அகழ்வாய்வின் ஒரு பகுதியாக உள்ள கொந்தகையில், மற்றொரு குழந்தையின் எலும்புக்கூடு கண்டறியப்பட்டுள்ளது.

கீழடி அகழ்வாய்வுத் திட்டத்தின் ஆறாம் கட்ட அகழ்வாய்வு கொந்தகை, மணலூர், அகரம், கீழடி ஆகிய நான்கு இடங்களில் தொடங்கப்பட்டு கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி முதல் நடந்து வருகிறது. அதில் கடந்த ஜூன் 19ம் திகதி குழந்தை ஒன்றின் முழு அளவிலான எலும்புக்கூடு முதன் முறையாக கண்டெடுக்கப்பட்டது.

கடந்த ஜூன் 19ஆம் திகதி நடந்த அகழாய்வில் 75 செ.மீ நீளமுள்ள குழந்தையின் எலும்புக்கூடு ஒன்று முழு அளவில் கிடைத்துள்ளது. குறித்த இடத்தில் தொடர்ந்து இடம்பெற்ற அகழ்வாய்வு பணிகளில் நேற்று முன்தினம் 95 சென்ரி மீற்றர் நீளத்தில் மற்றொரு குழந்தையின் எலும்புகூடு கிடைத்துள்ளது.

இடுகாடாகப் பயன்படுத்தப்பட்ட கொந்தகையில் முதல், 2ஆம், 3ஆம் நிலை எலும்புத் துண்டுகள் தொடர்ச்சியாக கிடைத்து வருகின்றன. இறுதியாக கண்டெடுக்கப்பட்ட குழந்தையின் எலும்புக்கூடுகள் 3ம் நிலை என கருதப்படுவதாக தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (ரி1)



## வைரஸுக்கு அரசனா, ஏழையா எனத் தெரியாது

*உலக சுகாதார அமைப்பு பிரேசில் ஜனாதிபதிக்கு தெரிவிப்பு*

ஜெனிவா, ஜூலை 9

வைரசுக்கு அரசனா அல்லது பாமர ஏழையா என்பது தெரியாது என கொரோனாப் பாதிப்புக்குள்ளாகியுள்ள பிரேசில் ஜனாதிபதிக்கு உலக சுகாதார அமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்ட செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் மூத்த அதிகாரியான மைக்கல் ரயான் கொரோனாத் தொற்றுக்குள்ளான பிரேசில் ஜனாதிபதி விரைவில் பூரண குணமடைய வேண்டி வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

அதில், உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்களும் இந்த அனுபவத்தைச் சந்தித்துள்ளனர். இந்த சம்பவம் வைரஸ் குறித்த உண்மைத்தன்மையை மக்களுக்கு எடுத்துரைத்துள்ளது.

வைரஸ் தாக்குதலுக்கு நாம் அனைவரும் இலக்குகள் தான். அதற்கு அரசனா அல்லது பாமர ஏழையா என்று தெரியாது. வைரஸால் அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்படுவதையே இது காட்டுகிறது. எனத் தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் உலகே அச்சத்தில் இருக்கும் போது, சமூக விலகல், முகக் கவசம் தேவையில்லை சுதந்திரமாக நடமாடுங்கள் என பிரேசில் ஜனாதிபதி பிரச்சாரம் செய்திருந்தார். (ரி1)

## அமெரிக்காவின் புதிய அறிவிப்பால் வெளிநாட்டு மாணவர்கள் சிக்கலில்

நியூயோர்க், ஜூலை 9

பல்கலைக்கழகங்களின் வகுப்புகள் அனைத்தும் ஒன்லைனில் நடத்தப்பட்டால் வெளிநாட்டு மாணவர்கள் தங்கியிருப்பதற்கு அனுமதிக்க முடியாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த விதிகளுக்கு இணங்காவிட்டால் நாடுகடத்தலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என்று அமெரிக்க குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கல் நிறுவனம் எச்சரித்துள்ளது. (ரி1)



## தலைநகர் பூட்டப்பட்டதால் செர்பிய நாடாளுமன்று முற்றுகை

பெல்கிரேட், ஜூலை 9

செர்பியாவில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கத் தலைநகர் பூட்டப்பட்ட நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் குழுவொன்று செவ்வாய்க்கிழமை இரவு பெல்கிரேடில் உள்ள செர்பிய நாடாளுமன்றக் கட்டடத்தை முற்றுகையிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுகள் அதிகரித்து வருவதால், இந்த வார இறுதியில் செர்பியா தலைநகர் பெல்கிரேடை பூட்டுவது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும் என செர்பிய ஜனாதிபதி அலெக்ஸாண்டர் வுசிக் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அறிவித்ததைத் தொடர்ந்தே இந்த முற்றுகைப் போராட்டம் இடம்பெற்றது. (ரி1)

### நினைவேந்தலுக்கு...

நடத்தும் வகையிலும் நினைவுநாளை நடத்தவுள்ளதாகப் பொலிஸார் மன்றில் குறிப்பிட்டிருந்தனர். கொரோனா காலத்தில் இவ்வாறான பொது நிகழ்வுகளை நடத்த அனுமதிக்கக் கூடாது என்றும் பொலிஸார் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தனர். பொலிஸாரின் கோரிக்கை தொடர்பில் நேற்று நண்பகல் 12 மணிக்கு சிவாஜிலிங்கத்தை முன்னிலையாகுமாறு நீதிமன்றம் பணித்திருந்தது.

சட்டத்தரணி ந.சிறீகாந்தா, முன்னாள் மாகாணசபைஉறுப்பினர்சிவாஜிலிங்கத்தின்சார்பில்மன்றில்முன்னிலையானார். பொலிஸாரின் குற்றச்சாட்டுக்கள் பொய் என்றவாதத்தை மன்றில் முன்வைத்தார். இதனையடுத்து, பொலிஸார் கூறியது போன்று சிவாஜிலிங்கம் நடந்து கொள்ளமாட்டார் என்ற உறுதிமொழியை வழங்குமாறு மன்று கோரியது. இதற்குப் பதிலளித்த சிறீகாந்தா, சிவாஜிலிங்கத்துக்கு பொலிஸார் கூறிய குற்றச்சாட்டுக்களைப் போன்ற எண்ணமே இல்லை. அப்படியிருக்கையில் எதற்காக உறுதி வழங்க வேண்டும் என்று கேட்டார். இதன் பின்னர் நீதிமன்றம் நினைவேந்தலுக்கு தடைவிதிக்க மறுத்தது. (ஒ,5,26)

### தடம்புரண்டது...

ஏற்பட்டது. ரயில் தடம்புரண்டபோதும் பயணிகள் எவருக்கும் எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

தடம் புரண்ட பெட்டிகளை ஈரப்பெரியகுளம் தொடருந்துப் பாதையில் விட்டுவிட்டு எஞ்சிய பெட்டிகளுடன் காலை 6.55 மணியளவில் கடுகதி ரயில் மீண்டும் கொழும்பை நோக்கிய தனது பயணத்தை தொடங்கியது. தடம்புரண்டரயில்பெட்டிகளை அகற்றும் பணி ரயில்வே திணைக்களப் பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாக வட பகுதிக்கான ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டது. (ஒ,5,18)

### மல்லாகத்தில்...

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மல்லாகத்தை சேர்ந்த பொன்னம்பலம் பிரகாஸ் எனும் சுற்றுச் சூழல் அதிகார சபை அலுவலர் மீதே நேற்றுக் காலை தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும், அவர் முன்னர் அந்தக் குழுவில் இருந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணை தொடர்கின்றது என்று யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர். (து)

### டிப்பர்...

சேர்க்கப்பட்டனர். இந்த விபத்து நேற்றுப் புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம் பெற்றது.

ஆனந்தபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்களான எஸ்.செல்வகுமார் (வயது-24), யோகம் பிரியதர்சன் (வயது -25), உதயநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த தர்மராசன் தக்சிகன் (வயது 20) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். டிப்பர் சாரதி பொலிஸில் சரணடைந்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)



# போதைப்பொருளுக்கு எதிராக வடக்கில் கடற்படை போராட்டம்

## கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

வடக்கில் போதைப்பொருள், மற்றும் கொரோனாத் தொற்றுக்கு எதிராக கடற்படையினர் போராடவேண்டிய நிலை உள்ளது என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுரு சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை தளத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; கொரோனாத் தொற்று காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் வடக்கு கடல் மார்க்கம் ஊடாக போதைப்பொருள் கடத்தல் மீண்டும் அதிகரித்துள்ளது. கடற்படையினர் தற்பொழுது உள்ள சூழ்நிலையில் வடக்கில் போதைப்பொருள் பாவனைக்கு எதிராகவும், கொரோனாத் தொற்றுக்கு எதிராகவும் போராட வேண்டிய நிலை உள்ளது. நாட்டில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்படையினர் மற்றும் கடலோர காவற்படையினர் சிறந்த முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

தற்போது இலங்கைக்குள் நுழைய முற்படும் சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புடைய நபர்களால் கொரோனாத் தொற்று பரவும் அபாயமும் உள்ளது. இவற்றில் இருந்தும் போதைப்பொருள் கடத்தலில் இருந்தும் நாட்டைப் பாதுகாக்க வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது.

ஜனாதிபதி மற்றும் கடற்படைத் தளபதியின் உத்தரவுக்கு அமைய இலங்கைக் கடற்பரப்பில் தற்போது கடற்படையினரின் சுற்றுக் காவல் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் கஞ்சா, ஹெரோயின் போதைப்பொருள்களை நாட்டுக்குள் கடத்தும் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த முடியும். அதே போல் புலனாய்வுத்துறையினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதே போல் நாட்டுக்குள் பிரவேசிக்கும் இலங்கைக் குடிமக்கள், மற்றும் வெளிநாட்டவர்கள் தொடர்பிலும் விமானப்படையினருடன் இணைந்து கடற்படையினர் கடமையாற்றி வருகின்றனர் - என்றார். (எ-111)

# புதிய அரசமைப்புக்கு ஆணை கொடுங்கள்

## கேட்கிறார் பசில் ராஜபக்ஷ



கொழும்பு, ஜூலை 9

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான ஆணையை எதிர்வரும் பொதுத் தேர்தலில் வழங்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ கோரியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

19ஆவது திருத்தத்தில் இருந்து அல்லாமல் நாட்டுக்கு பொருத்தமான புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும். ஒவ்வொருவரின் அழுத்தத்துக்கும் அடிபணிந்து ஒவ்வொரு பகுதியை இணைக்காமல், நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு உறுதியான அதிகாரம் வேண்டும்.

இல்லாவிட்டால், அரசமைப்பு உருவாக்கத்தின்போது ஒவ்வொருவரும் பணயக் கைதிகளாக வேண்டிவரும்.

கடந்த ஆட்சிக்காலத்தில் பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. சர்வதேச ஒப்பந்தங்களை உடனடியாக நிராகரிக்க முடியாது. அவை தொடர்பில் ஆராய்ந்த பின்னரே முடிவு செய்யப்படும் - என்றார். (எ)

# ஒரு பிரசவத்தில் இரு குட்டிகள்!

கொழும்பு, ஜூலை 9

மின்னேரியா தேசிய பூங்காவிலுள்ள யானையொன்று ஒரேபிரசவத்தில் இரண்டு குட்டிகளை ஈன்றுள்ளது. இதுவே இலங்கையில் யானை ஒன்று ஒரே பிரசவத்தில் இரண்டு குட்டிகளை ஈன்ற முதல் தடவையாகும் என வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியர் தாரக பிரசாத் தெரிவித்துள்ளார்.

இந்தக் குட்டிகள் பிறந்து மூன்று அல்லது நான்கு வாரங்களே ஆகியுள்ளதாகவும் மின்னேரியா பூங்காவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 2018 ஆம் ஆண்டில் மதுரு ஓயாவின் அருகே ஒரே பிரசவத்தில் இரண்டு குட்டிகளை ஈன்ற யானை கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் பிறக்கும்போதே குட்டிகள் இறந்துவிட்டனஎன தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# போதைப்பொருள் விற்பனையை வழிநடத்தியவர் கொன்ஸ்டபிள்

கொழும்பு, ஜூலை 9

போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தில் இருந்த போதைப்பொருளை கடத்தல்காரர்களுக்கு மீள விற்பனை செய்தமையை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வழிநடத்தியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபின், கரந்தெனிய பகுதியை சேர்ந்தவர் என்றும், சந்தேகநபருக்கு அதிக பெறுமதியான 4 காணிகள் சொந்தமாகவுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அதிகாரிகள் உள்ளிட்ட சந்தேகநபர்களின் சொத்து விவரங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

21 அதிகாரிகளின் சொத்து விபரங்கள் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்களின் வங்கிக் கணக்குகள் அனைத்தும் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன. இந்த வங்கிக் கணக்குகள் தொடர்பில் விரிவான அறிக்கை வழங்குவதற்கு குற்றப்புலனாய்வு பிரிவினர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, பொலிஸ் போதைப்பொருள்ஒழிப்புபணியகத்துடன் இணைந்து செயற்பட்ட சந்தேகநபர்களின் 7 வாகனங்களைக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். போதைப்பொருளுடன் தொடர்புடைய பொலிஸ் கொன்ஸ்டபிள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார். (எ)

# சஜித்துக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 9

ஐக்கிய தேசியக் கட்சிக்குரிய பச்சை நிறத்தை சஜித் அணி தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பயன்படுத்தியமைக்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்றுப் புதன்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான முன்னாள் அமைச்சர் அக்கிலவிராஜ் காரியவசம் கடிதம் மூலம் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

சஜித்அணிக்கட்சியின்நிறம்நீலம்என்ற போதும் ஐக்கிய தேசியக் கட்சியின் பச்சை நிறத்தை அவர்கள் பரப்புரைகளில் பயன்படுத்துவது தமது கட்சிக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அக்கிலவிராஜ் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ரூபெல்லாவை ஒழித்த இலங்கை

கொழும்பு, ஜூலை 9

உலக சுகாதார அமைப்பின் வடகிழக்கு ஆசிய பிராந்திய நாடுகளில் ரூபெல்லா மற்றும் அம்மை நோயை ஒழித்த முதல் இரண்டு நாடுகளாக இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் பெயரிடப்பட்டுள்ளன.

தொடர்ந்து மூன்று வருடங்களாக ரூபெல்லா அல்லது அம்மை நோயாளர் ஒருவரேனும் இனங்காணப்படாவிட்டால் அந்த நாடு இந்த நோய்கள் இரண்டையும் ஒழித்த நாடாக உலக சுகாதார அமைப்பால் பிரகடனப்படுத்தப்படும்.

மாலைதீவில் இறுதியாக கடந்த 2009 ஆம் ஆண்டு அம்மை நோயாளர் ஒருவர் பதிவாகியிருந்த நிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு ரூபெல்லா நோயாளர் ஒருவர் பதிவாகியிருந்தார்.

இதேவேளை, இலங்கையில் கடந்த 2016 ஆம் ஆண்டு இறுதியான அம்மை நோயாளர் பதிவான நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ரூபெல்லா நோயாளர் ஒருவர் இனங்காணப்பட்டார் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (எ)

# இரகசியத்தை வெளியிட்டால் அரசிலுள்ளோர் தடம்புரள்வர்

## ரணில் கூறுகின்றார்

மத்திய வங்கி பிணை முறி மோசடி பற்றிய பல தகவல்கள் என்னிடம் இருக்கின்றன. அவற்றை வெளியிட்டால் அரசில் உள்ள பலரும் தடம்புரண்டு விடுவார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க. ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் முட்டாள்கள் என்று கூறிய சஜித் பிரேமதாச இப்போது விலகிச் சென்றிருக்கின்றார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளும், மத்தியஸ்தமான வாக்குகளும் அவருக்குக் கிடைத்திருக்கா விட்டால் பெரும் தோல்வியைச் சந்தித்திருக்க நேரிடும். ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் டி.எஸ்.சேனநாயக்கவின் காலத்தைப்போன்று துளிர்விட ஆரம்பித்துள்ளது. விரைவில் அதிரடிகளைக் காண்பிப்போம். இழந்துபோன வாக்குகள் அத்தனையையும் திரும்பப் பெறுவோம் - என்றார். (எ)

## கோத்தாபயவின்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற வேட்பாளருமான ஈ.சரவணபவன்.

நமது ஒன்றுபட்ட சக்தியால் மஹிந்த ராஜபக்சவின் அராஜக அரசை வீட்டுக்கு அனுப்பினோம். இதே உணர்வுடன் நாம் ஒன்றாக செயற்பட்டால் கோத்தபாயவின் அடக்கு முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும். இது உறுதி என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர்கள் பெரும் வல்லமை கொண்டவர்கள். ஆனால் சுதந்திரமாகச் செயற்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. திறமையான பல ஊடகவியலாளர்கள் தமது உணர்வுபூர்வமான ஆக்கங்களை வெளியிடமுடியாமல் தம்மைத் தாமே சுயதணிக்கைக்கு உள்ளாக்கிக் கொண்டுள்ளனர், சுதந்திரமாக நடமாடமுடியவில்லை.

எனது ஊடகமான உதயன் மீது 40 தடவைகள் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஆசிரியர் குகநாதன் மோசமாகத் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக வழக்குகள் உள்ளன. ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரோன்கூட உதயனுக்கு நேரடியாக வந்து பார்த்து விட்டுப்போனார். எனினும், எவ்வித பயனும் ஏற்படவில்லை.

எனவே ஊடகவியலாளர்கள் தற்பொழுதே முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். எமக்கு ஏற்பட்டிருக்கும் அராஜக செயல்கள், அடக்குமுறைகள் தொடர்பாக சர்வதேச அரங்குக்கு கொண்டுசெல்லவேண்டும். சர்வதேச ரீதியாக ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். அதற்கான சகல உதவிகளையும் வழங்க நான் தயாராக இருக்கின்றேன். என்று சரவணபவன் தெரிவித்தார்.

இதன்போது ஊடகவியலாளர்களின் கேள்விக்கும் சரவணபவன் பதிலளித்தார்.

**கேள்வி**: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வு என்றும் அபிவிருத்தி என்றும் கூறுகின்றது. இவை இரண்டையும் ஏக காலத்தில் செய்யமுடியுமா?

**பதில்**: அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் வெவ்வேறல்ல. இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைக்கப்பட்டவை. கடந்த நான்கு தசாப்தங்களாக எமது பாரம்பரிய, கலை, கலாசாரம், கல்வி, உட்கட்டமைப்பு, சுகாதாரம், மொழி, இனம் மற்றும் பண்பாடு என்பவை அழிக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வந்தன. இதனாலேயே ஆயுதம் ஏந்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப்போராட்டம் நடத்தியபோதும்கூட அபிவிருத்திக்காக (தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்) தனியாக செயற்பட்டனர். அந்த ஆயுதப் போராட்டத்தின் பயன்தான் எமது பிரச்சினைகளை ஜெனிவாவரை கொண்டுசெல்ல வாய்ப்பு ஏற்படுத்தியது.

இதேபோன்றுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பயணிக்கின்றது. எங்களுடைய சாணக்கியமான செயற்பாட்டின் ஊடாகத்தான் கூட்டமைப்பின் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களூடாகவும் தலா 30 கோடி ரூபா நிதியில் அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்த முடிந் தது.

அதேவேளை, அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. நிபுணத்துவ குழு மூலமாக இடைக்கால கணக்கறிக்கையும் தயாரிக்கப்பட்டது. இது 2019ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை தொடர்ந்து நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருந்தது. துரதிர்ஷ்டவசமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் அது தடைப்பட்டது.

**கேள்வி**: முன்னாள் போராளி பஷீரின் (காக்கா அண்ணை) பேட்டி முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டது தொடர்பாக உதயனைத் தொடர்புபடுத்தி விமர்சிக்கப்படுகின்றதே?

**பதில்**: இதுவரை என்னிடம் யாரும் இதைப்பற்றிக் கேட்கவில்லை. நீங்கள்தான் கேட்கின்றீர்கள். நான் ஆசிரிய பீடத்தின் செயற்பாடுகளில் தலையிடுவது இல்லை. அவர்கள் சுதந்திரமாகவே இயங்குகின்றனர். நீங்கள் குறிப்பிட்ட தகவல் இதே ஊடக அமையத்தில் வைத்தே பகிரங்கமாகக் கூறப்பட்டது, இதை உதயன் மட்டும் வெளியிடவில்லை, சகல ஊடகங்களும்தான் வெளியிட்டன. இதை ஏன் பெரிதுபடுத்துகின்றனர் என்று புரியவில்லை. அவரவர் பார்க்கும் பார்வையில்தான் இது உள்ளது.

**கேள்வி**: கட்சிக்கு முரண்பாடாக தன்னிச்சையாக செயற்படுகின்றார் என்றுகூறி வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் நீக்கப்பட்டார். ஆனால், சுமந்திரன் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையே, அது ஏன்?

**பதில்**: இந்தக் கேள்விக்கு என்னால் பதிலளிக்க முடியாது. கட்சியின் மேலிடம் அதாவது, தலைவர் மற்றும் செயலாளரிடமே இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும்.

**கேள்வி**: தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக போட்டியிடும் அணியினர் மூன்று ஆசனங்களைப் பெறுவோம் என்று கூறுகின்றனர். இந்த நிலையில், உங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தனை ஆசனங்களைப் பெறும்?

**பதில்**: "அப்படியா? அவர்கள் மூன்று ஆசனங்கள் பெறுவோம் என்று கூறினாலும் நாங்கள்தான் ஏழு ஆசனங்களையும் பெறுவோம்"

என்று சிரித்துக்கொண்டே கூறினார். அதற்கான விளக்கத்தையும் அவர் கூறினார்.

சகல கட்சிகளும் பிரிந்துதானே உள்ளன! "ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு தரப்பாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மூன்றாகவும் டக்ளஸின் கட்சி இரண்டாகவும் மாற்றுத் தலைமை தேசியம் என்றவர்கள் இரண்டு மூன்றாகவும் சிதைந்து காணப்படுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ளோரிடம் கருத்து முரண்பாடுகள் இருப்பினும் கட்டுக்கோப்பாகவே இருக்கின்றோம். எங்களுடைய வாக்குவங்கி அப்படியே இருக்கின்றது. எங்களுடைய சேவைகளை மக்கள் அங்கீகரித்துள்ளனர். எனவே மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். எமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது.

**கேள்வி**: வேட்பாளர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருப்பதால் கட்சிக்கு பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உண்டு அல்லவா?

**பதில்**: யாராக இருந்தாலும் அவதானத்துடன் பேசவேண்டும். ஒரு மரத்தில் குருவிச்சை படர்ந்துவிட்டது என்றால் குருவிச்சை செடியைத்தான் வெட்டியெறிய வேண்டுமே தவிர, மரத்தை வெட்டக்கூடாது அல்லவா! -என்றார். (சு-2)

## யாழ்ப்பாணத்...

சிற்றூழியராகப் பணியாற்றும் மல்லாகத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் பிரகாஸ் (வயது28) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார். நேற்றுக் காலை 8.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாவட்டச் செயலகத்துக்குள் நுழைவதற்கான பிரதான வாயிலுக்கு வெளியே உள்ள மரத்துக்கு அருகில் நீண்ட நேரமாக இருவர் நின்றுள்ளனர். அவர்கள் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளுடன் நின்றுள்ளனர். மாவட்டச் செயலகப் பணியாளர் வழமைபோன்று பணிக்காக வந்துள்ளார். மாவட்டச் செயலக நுழையும் வாசலுக்கு அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு இறங்கியுள்ளார். இதன்போது நீண்ட நேரமாகக் காத்திருந்த இருவரும் வாளுடன் அவரை வெட்ட முற்பட்டுள்ளனர்.

மாவட்டச் செயலக பணியாளரை, வாளுடன் வெட்ட சிலர் வருவதைக் கண்டு அங்கிருந்தவர் எச்சரித்ததும், பணியாளர் ஓட முற்பட்டுள்ளார். அவர் தடக்குப்பட்டு கீழே விழுந்துள்ளார். அவர் மீது மூன்று தடவைகள் வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதேவேளை வாள்வெட்டுச் சம்பவத்தை நேரில் அவதானித்துக் கொண்டிருந்த ஒருவர் மோட்டார் சைக்கிளை போட்டுவிட்டு ஓடியுள்ளார். வாள்வெட்டுக் குழுவினர் அவரது மோட்டார் சைக்கிளையும் தாக்கி விட்டு சவகாசமாக மோட்டார் சைக்கிளில் ஏறி கச்சேரி, நல்லூர் வீதியூடாக தப்பிச் சென்றுள்ளனர்.

வாள்வெட்டு நடந்த பகுதியிலிருந்து பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதனுள் 2 ஆயிரம் ரூபா பணம், ஏரிஎம் அட்டை என்பன காணப்பட்டுள்ளன. பேர்ஸ் வாள்வெட்டுக்கு இலக்கான பணியாளரினதோ, மோட்டார் சைக்கிளை போட்டு விட்டு ஓடியவரினதோ இல்லை என்று கண்டறியப்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகமாக இயங்கும் மாவட்டச் செயலகத்தின் முன்பாக, பகல் வேளையில் இடம்பெற்ற இந்தத் துணிகர வாள்வெட்டுச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஒ,5,6,26)

## பதில்...

மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நாளை 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் திடீரென இன்றைய தினம் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதியிடப்பட்டு இன்றைய கூட்டத்துக்கான அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. அது 7ஆம் திகதியே உறுப்பினர்களுக்கு கிடைத்துள்ளது.

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக 4 முழு நாள்களுக்கு முன்னரே கூட்டத்துக்கான அறிவித்தல் அனுப்பப்பட வேண்டும். அதனை மீறி பதில் முதல்வர் செயற்பட்டுள்ளமை தொடர்பில் ஆளும் கட்சிக்குள் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது. இது தொடர்பில் இன்றைய அமர்வில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பவுள்ளதாக அறிய முடிகின்றது.

இதேவேளை, முதல்வராக ஆனோல்ட் பதவி வகித்த காலத்தில், சபை அமர்வுக்கு முதல் நாள் ஆளும் கட்சி உறுப்பினர்களை அழைத்து சபை அமர்வு தொடர்பாக ஆலோசிப்பது வழக்கம். ஆனால் பதில் முதல்வராக து.ஈசன் பொறுப்பேற்ற பின்னர் சபை அமர்வுக்கு முதல் நாள் ஆளும் கட்சியினரை அழைத்துக் கலந்துரையாடுவதை தவிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய தினமும், ஈ.பி.டி.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த தலா இரண்டு உறுப்பினர்களை மாத்திரம் அழைத்து பதில் முதல்வர் கலந்துரையாடல் நடத்தியுள்ளார். ஆளும் கட்சியுடன் கூட்டம் நடத்தவில்லை. (ஒ,5)

## தமிழ்...

மிகவும் உறுதியாக வலியுறுத்த விரும்புகின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்களுடைய தேசியப் பிரச்சினை தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேயவர்தன தெரிவித்த கருத்துக்கு இரா.சம்பந்தன் நேற்று வெளியிட்டுள்ள பதில் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினை நாடு சுதந்திரமடைந்த காலம் முதற்கொண்டு நீடித்து வருகின்றது.

1956ஆம் ஆண்டு தொடக்கம் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் இந்த நாட்டில் ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதற்காக ஜனநாயக ரீதியான கோரிக்கைகளை வைத்து தமிழ் மக்கள் த்ங்களுடைய ஏகோபித்த ஆதரவை அந்தக் கட்சிகளுக்கும் கொள்கைகளுக்கும் வழங்கி வந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படையில், ஒரு மக்களை ஆட்சி புரிவதற்கு ஜனநாயக ரீதியாக அந்த மக்களுடைய சம்மதமும் இணக்கமும் பெறப்பட வேண்டும். அதனடிப்படையில் 1956ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களால் வழங்கப்பட்ட ஜனநாயக ரீதியான தீர்ப்புகள் மதிக்கப்பட வேண்டும். அது என்னவென்றால், ஆட்சி முறையில் மாற்றம் ஏற்பட்டு அதியுச்ச அளவில் அதிகாரங்கள் பகிந்தளிக்கப்பட்டு மக்கள் தங்களுடைய கருமங்களைக் கையாளக்கூடிய அரசியல் சாசன ரீதியாக உலகத்தில் பல நாடுகளில் நிலவுகின்றதுபோல் ஒரு ஆட்சி முறை ஏற்பட வேண்டும் என்பதே. இதனை எவராலும் உதாசீனம் செய்ய முடியாது.

இலங்கை அரசின் சம்மதத்துடன் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் குடியியல் உரிமைகளின் அடிப்படையிலும், பொருளாதார சமூக் கலாசார உரிமைகளின் அடிப்படையிலும் ஒரு மக்கள் குழாமுக்கு உள்ளக சுயநிர்ணய உரித்து உள்ளது. இவையெல்லாவற்றையும் இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

இவற்றை நிறைவேற்ற வேண்டியது இலங்கை நாட்டினதும் அரசினதும் கடமையாகும். இவை மறுக்கப்படுகின்றபோது விளைவுகள் பாதகமாக அமையலாம். ஒரு நீண்டகால கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பின்பற்றி வருகின்ற தமிழ் மக்களுடைய உரிமைகள் எவராலும் இலகுவாக நிராகரிக்கப்பட முடியாதவையாகும். இதனை மிகவும் உறுதியாக வலியுறுத்த விரும்புகின்றோம் என்றுள்ளது. (ஒ,5,22)



இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக சுமார் 4 மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த கிரிக்கெட் ஆட்டங்கள் நேற்றுடன் மீண்டும் ஆரம்பமாகின. அமெரிக்காவில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் நிறவெறிக்கு எதிரான போராட்டங்களை ஆதரிக்கும் வகையிலும் நிறவெறிக்கு எதிரான செயற்பாடுகளை கண்டிக்கும் வகையிலும் இரு அணிகளின் வீரர்களும் தமது செய்கைகளை வெளிப்படுத்தினர். (ம)

# மின் கட்டணத்தில் ஒரு பகுதியை அரசு பொறுப்பேற்கத் தீர்மானம்

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அதிகரித்த மின்சாரக் கட்டணப் பட்டியலில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. மின்சாரக் கட்டணம் அதிகரித்ததன் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக மின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவை நேற்றுக் கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அமைச்சர் தெரிவித்தார். கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவால், பொதுமக்கள் இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் வீட்டுக்குள்ளேயே தங்கியிருந்தனர். இதன் காரணமாக வீடுகளின் மின்சாரக் கட்டணப் பட்டியல் அதிகரித்துள்ளதாக அமைச்சர் கூறினார். வீடுகளுக்குள்ளேயே தங்கியிருக்குமாறு அரசாங்கத்தால் ஆலோசனை வழங்கப்பட்டமையால் அதிகரித்த மின்சாரக் கட்டணத்தின் ஒரு பகுதியை அரசின் ஊடாக செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக மின் சக்தி அமைச்சர் தெரிவித்தார்.

அதிகரித்த மின்சாரக் கட்டணத்துக்கு சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக மின்சக்தி அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய குழுவின் அறிக்கை அமைச்சரவையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவையில் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய, இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (து)

வீடு வாடகைக்கு
அம்மன் வீதி திருநெல்வேலியில்,
3 படுக்கையறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உள்ளது.
வாடகை பேசி தீர்மானிக்கப்படும்.
076 221 0106

## நல்லூரும்...

அநுராதபுர யுகத்தில் கட்டப்பட்ட கோகண்ண விகாரை மீதே திருகோணமலையில் உள்ள திருக்கோணேச்சரம் ஆலயம் கட்டப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாக எல்லாவெல மேதானந்த தேரர் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில், தற்போது யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் சபுமல் குமார என்ற சிங்கள இளவரசரால் கட்டப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகள் தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட செயலணி குறித்து தமிழ் முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்ளவேண்டிய தேவை கிடையாது. செயலணியின் நோக்கம் மக்கள் மத்தியில் முரண்பாடுகளை தோற்றுவிப்பது அல்ல. என்பதை தமிழ் பேசும் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

சிதைவடைந்தள்ள தொல்பொருள் மரபுரிமையை அடையாளப்படுத்தி அதனைப் பாதுகாப்பதே எமது பிரதான நோக்கம். பௌத்த மத மரபுரிமைகளை மாத்திரம் பாதுகாப்பது செயலணியின் நோக்கமல்ல, பிற இனங்களின் மதம் தொடர்பான உரிமைகளும் செயலணியின் ஊடாகப் பாதுகாக்கப்படும். ஆய்வு நடவடிக்கைகளின்போது கிடைக்கப் பெறும் தரவுகளை கொண்டு வெளியிடும் செய்திகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

கோட்டை இராசதானி காலத்தில் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் சிங்கள இளவரசரான சபுமல் குமார என்பவரால் கட்டப்பட்டது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாங்கள் நல்லூர் ஆலயத்துக்கு உரிமை கோரவில்லை. இந்து மதத்திற்கும், பௌத்த மதத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது இரு தரப்பு மத வழிபாடுகள், மற்றும் கட்டிடக்கலை சிற்பங்கள் ஊடாக உறுதியாகுகின்றன - என்றார். (ம)

## வாழ்வதற்கான...

தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார். அத்துடன், வடக்கு மக்களுக்கு வாழும் உரிமை இருந்தால்போதும் அவர்களுக்கு அதிகாரப்பகிர்வு அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதிகாரப்பகிர்வு தொடர்பில் கருத்து வெளியிட்ட இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் என்பது இந்திய அரசால் எமக்கு பலவந்தமாக திணிக்கப்பட்டதொன்றாகும். எனவே அதனை மதிக்கவேண்டும், நடைமுறைப்படுத்தவேண்டும் என்பது கட்டாயமில்லை. தேர்தல் காலத்தில் மாத்திரமே 13ஆவது திருத்தச்சட்டம் பற்றி பேசப்படுகின்றது. தேர்தல் முடிந்த பிறகு 13 என்று ஒன்று இருக்கின்றதா என்றுகூட தெரியாது.

வடக்கு மக்களுக்கு சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலையே அவசியமாகின்றது. வேலையின்மை பிரச்சினை தீர்க்கப்படவேண்டும், வீடுகள் நிர்மாணிக்கப்படவேண்டும், விவசாயத்தை முன்னெடுப்பதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டும். இவை நடைபெற்றால் அதிகாரப் பகிர்வுக்கான அவசியம் எழாது. அரசியல்வாதிகளே 13 பற்றி கருத்து வெளியிடுகின்றனர். மக்கள் அதிகாரப்பகிர்வைக் கோரவில்லை.

தமிழ் அடிப்படைவாதிகள் தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்காகவும், சிங்கள சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்காகவுமே இவ்வாறான அறிவிப்புகளை விடுத்துவருகின்றனர். எனவே, அதிகாரப்பகிர்வு அவசியமில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எமது அமைப்பு முழுமையான எதிர்ப்பை வெளியிடுகின்றது- என்றார். (ஒ,5,44)

## உதவி...

வாகனம் இரண்டு தடவைகள் மறிக்கப்பட்டு இராணுவத்தினரால் சோதனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள ஓர் உதவித் தேர்தல்கள் ஆணையாளர், தனது கடமைகளை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு வீடு திரும்பும்போதே இராணுவத்தினரால் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்.

அவரது வாகனத்தை மறித்த இராணுவத்தினர் சோதனை செய்யவேண்டும் என்று கூறியுள்ளனர். அதற்கு உதவித் தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல் திணைக்கள வாகனம் என்று தெரிவித்து அடையாள அட்டையையும் காண்பித்துள்ளார். ஆனாலும் இராணுவத்தினர் விடவில்லை. நீண்ட போராட்டத்தின் பின்னர் பயணத்தை தொடர அனுமதித்தனர். சிறிது தூரத்தில் மற்றொரு சோதனைச் சாவடியில் மறித்த இராணுவத்தினர், சோதனை செய்யாமல் வாகனத்தை பயணிக்க அனுமதிக்க மாட்டோம் என்று விடாப்பிடியாக நின்றுள்ளனர். இறுதியில் வாகனத்தை சோதனை செய்த பின்னரே பயணிக்க அனுமதித்துள்ளனர்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் வாகனமும் மறிக்கப்பட்டு இராணுவத்தினரால் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## கொரோனா...

தெரிவித் தது.

நேற்று நடத்திய பி.சி.ஆர். பரிசோதனையில் 9 பேர் கொரோனாத் தொற்றால் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (து)

Hot Line: 0777173517
COVID-19
DMI
COMPUTER EDUCATION
Diploma in
Auto CAD
2D & 3DModeling
REVIT மற்றும் SketchUp வகுப்புகள்
DMI COMPUTER EDUCATION
113, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். Tel:. 021 222 4403
129/2, M. M. V. வீதி, நெல்லியடி. Tel:. 021 226 2470

குருத்துவத்தில்
40 ஆண்டு நிறைவு யூபிலி

குருத்துவ வாழ்வில்
40 ஆண்டு நிறைவு யூபிலியை
எமது பங்கின் பரிபாலகர்
அருட்கலாநிதி மைக்கல்
APR.சவுந்தரநாயகம்
அடிகளார் புனித பத்திமா
அன்னையின்
திருத்தலத்தில் நினைவு
கூரும் இன்றைய நாளில்
அருட்தந்தையை
வாழ்த்துவதுடன் இறை
ஆசிரையும்
வேண்டுகிறோம்.
வாழ்த்துவோர்: பங்கு மக்கள்
பண்டத்தரிப்பு

25 ஆண்டுகள் நவாலி நினைவலைகள்



செல்வி
ஹேமலதா செல்வராஜா
(J/134, Navali North,
Grama officer– VSW)
மறைந்த
சாம்பசிவம் பிரதீக்ஷ் (சசி)
(மாணவ முதல்வன் -
நவாலி மகாவித்தியாலயம்)

மறைந்த பிலிப்புப்பிள்ளை
கபிரியேல்பிள்ளை
(Sillalai Grama officer)
கடந்த 09.07.1995 அன்று மறைந்த எமது குடும்ப விளக்குகளுடன் மறைந்த 147 பேரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.
குடும்பத்தினர்
நவாலி வடக்கு.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.